## கூரியரில்

கம்யூனிசம்,
காதலோடு
க்ரைம் கலந்து தந்த
பி.கே.பி.யின் 'பந்தயத்
துடிப்பு' முடிக்கும் வரை
இதயத் துடிப்பு எகிறிக்
கொண்டேதான் இருந்தது.

சிவபாரதி, சிதம்பரம்

அட்டைப்படத்தில் ஆரம்பித்த ஆரவாரம் கடைசிப் பக்கம் வரை கொஞ்சம் கூட, 'சுருதி' குறையவில்லை. நாவல் உலகில் தனித்துவமாய் விளங்கும் ஊஞ்சல் என்றும் எங்கள் ஏஞ்சல்தான்!

ஜி.கே.எஸ்.மூர்த்தி, கோபி.



பி.கே.பி.யின் 'பந்தயத் துடிப்பு' முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்னும் வரிகளை மெய்ப்பிக்க வந்த நாவலாய் பிரகாசித்தது.

ஜி.மனோகரன், கச்சிராயபாளையம்.

பி.கே.பி. அவர்களின் பரவச எழுத்துக்களில் நாவல் பரபரப்பாய் சென்றது. போனஸ் குறுநாவல் தலைப்பிலேயே கதை சொன்னது. ஒரு சமூகப் படத்திற்கு நல்ல விமர்சனம் தந்ததற்கு நன்றி!

ஆர்.சதிஷ்குமார்,
பல்லவபுரம்.

## கூறியது!





# பரத் இருக்க பயமேன்?



பட்டுக்கோட்டை
**பிரபாகர்**



எனக்கு இந்தக் காதல் பிடித்திருக்கிறது.

எத்தனை விதமான மாற்றங்கள் எனக்குள் புதிதாக அரும்பியிருக்கின்றன காதலிக்கத் துவங்கிய பிறகு.

ஷவரில் நனைந்தபடி அரை மணி நேரமா நிற்பேன்? கண்ணாடியில் என்னை இவ்வளவு உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டதுண்டா? தலையணையை அணைத்துக் கொள்ளும்போது உடம்பில் இத்தனை உஷ்ணம் பரவியதுண்டா? எடுத்ததெற்கெல்லாம் அலை அலையாகச் சிரிப்பு வருமா என்ன?

உலகமே துடைத்து வைத்தது போலப் புதிதாய்த் தெரிகிறது. என் உற்சாகத்தைப் பூவோடு, பட்டாம்பூச்சியோடு, வானவில்லோடு, கோயில் கோபுரத்தோடு, அதில் அமரும் பறவையோடு .. என்று மௌன மொழியில் பகிர்ந்து கொள்ளத் துடிப்பாய் இருக்கிறது.

"ராஜி, நீ எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா?"

பாலாஜி ஒரு தடவைதான் காதோடு



அதுவும் கிசுகிசுப்பாகச் சொன்னார்.

ஆனால் அதை மனசு பிரதி எடுத்து ஆயிரம் தடவைக்கு மேல் பாலாஜியின் குரலிலேயே கேட்டுக் கிறங்கிப் போகிறதே.

உப்பும், தித்திப்பும் கலந்த கிராக்ஜாக் போலதான் காதலும். இதில் சுகமும் அவஸ்தையும் சம விகிதத்தில் கலப்படம்.

பாலாஜிக்கு உடம்பு பூரா திமிர்.

தைரியமாக வீட்டிற்கே போன் செய்து பெண் குரலில் பேசுவார் என் அண்ணன் சுந்தரிடம். நேற்று அப்படித்தான்...

"சார், நான் ராஜியோட ஃபிரண்டு வேணி பேசறேன். நேத்து கம்ப்யூட்டர் கிளாஸ்ல நடத்தின பாடம் பத்தி ஒரு சந்தேகம் கேக்கணும். ராஜியைப் பேசச் சொல்றீங்களா?"

அண்ணன் நம்பி என்னை அழைத்து ரீசிவரைக் கொடுத்துவிட்டு பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தார்.

"ஹலோ, நான் ராஜி பேசறேன்."

"பாலாஜி ஹியர், குட்மார்னிங், குளிச்சிட்டியா?"

"இன்னும் இல்லை. எதுக்குடி கேட்டே?"

"நேத்து கிள்ளின இடம் சிவந்திருக்கான்னு நீ பார்த்துட்டியான்னு விசாரிக்கலாம்னுதான்..."

"ச்சீ! போடி! உனக்கு விவஸ்தையே

இல்லை.''

''இன்னைக்கு சினிமா போகலாமா?

''இல்லை, நான் வரலை''.

''எங்கே கூப்புடறா உன் ஃப்ரண்டு?'' இடைமறித்தார் அண்ணன்.

''அவ வீட்ல அவங்கண்ணிக்கு வளைகாப்பு நடத்தறங்களாம். வர்றியான்னு கூப்புட்டா. வீடு திரும்ப ஒம்போதரை ஆய்டும். நான் வரலைன்னுட்டேன்'' என்றேன் நான்.

''பிரியப்பட்டுக் கூப்புடறா, பரவாயில்லை. போய்ட்டு வா. உன் மொபட் வேணாம். காரெடுத்துகிட்டு போய்ட்டு வா. அவகிட்டே வர்றேன்னு சொல்லு.''



நான் போனில், ''வேணி, அண்ணன் பர்மிஷன் கொடுத்துட்டார். நான் வர்றேன். கம்ப்யூட்டர் கிளாஸ் முடிஞ்சதும் அப்படியேப் போய்டலாம்'' என்று வைத்தேன்.

அண்ணன் தன் மணிபர்ஸ் எடுத்தார். இருநூறு ரூபாய் எடுத்துக் கொடுத்தார்.

'எதுக்குண்ணா?''

''வெறுங் கையோட போனா நல்லா இருக்காதும்மா. சின்னதா வெள்ளி குத்துவிளக்கு இல்லைன்னா குங்குமச் சிமிழ் வாங்கிட்டுப் போ''

எனக்கு சிரிப்புத்தான் வந்தது. தலையசைத்து வாங்கி வைத்துக்



கொண்டேன். அண்ணனை ஏமாற்றுகிறோமே என்று சின்னதாக ஒரு குறுகுறுப்பும் ஏற்பட்டது.

அப்பா, அம்மா நினைவடுக்குகளில் சரியாகப் பதியும் முன்பாகவே மேலே சென்றுவிட்டார்கள். என்னை வளர்த்தது, படிக்க வைத்தது எல்லாம் அண்ணன்தான்.

அண்ணன் என்ஜினியர், சிவில், ஒரு பெரிய கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனியில் வேலை பார்க்கிறார். நல்ல சம்பளம். தவிர இவர் தனிப்பட்ட முறையில் காண்ட்ராக்ட் எடுத்து வீடுகள் கட்டித் தருகிறார்.

ஓகோ வசதி இல்லையென்றாலும் அப்பர் மிடில் கிளாஸ்தான். இது சொந்த வீடு. போன வருஷம்தான் குடி வந்தோம். இரண்டு பெட்ரூம்கள், கிச்சன், ஹால், கச்சிதமான வீடு, பியட் கார் இருக்கிறது. ஸ்கூட்டர் இருக்கிறது. மொபட் இருக்கிறது. வீட்டில் டி.வி. வி.சி.ஆர்., ரெஃப்ரிஜிரேட்டர் என்ற எந்தக் குறையும் இல்லை.



டிகிரி படித்து முடித்துவிட்டு வீட்டில் போரடிக்கிறது. என்றேன். 'கம்ப்யூட்டர் கத்துக்கயேன்' என்றது அண்ணன்தான். சேர்ந்தேன். காதலையும் கற்றுக் கொண்டேன் பாலாஜியிடம்.

பாலாஜி ஒரு டெக்ஸ்டைல்ஸ் கம்பெனியில் கம்ப்யூட்டர் ப்ரோகிராமர். பலவிதமான புடவை டிசைன்கள்

கம்ப்யூட்டரிலேயே தயாரிக்கிறார். பகுதி நேரமாக அந்த இன்ஸ்டிட்யூட்டிற்கு வந்து கம்ப்யூட்டர் பாடம் கற்றுத் தர வந்து... எனக்கு மட்டும் போனஸாக வேறு என்னென்னவோ கற்றுத் தருகிறார்.

''உங்களால நான் அண்ணன்கிட்ட பொய் சொல்ல வேண்டியதாப் போச்சு. அவரும் நம்பி பிரசன்டேஷன் வாங்கிப் போன்னு சொல்லி பணம் கொடுக்கறார். எனக்கு சங்கடமாப் போச்சு. எல்லாம் உங்களாலதானே?''

இன்னும் படம் ஆரம்பிக்காத தியேட்டரில் பாலாஜியிடம் பொய்யாகக் கோபப்பட்டேன்.

''சரி, உனக்குப் பொய் பிடிக்கலைதானே?''



''ஆமாம்''

''நாளையிலேர்ந்து போன் செஞ்சா, 'நான் ராஜியோட லவ்வர் பாலாஜி பேசறேன். கொஞ்சம் சீரியஸா கொஞ்ச வேண்டியிருக்கு. பேசச் சொல்லுங்கன்னு சொல்றேன் போதுமா?''

''நான் தொலைஞ்சேன்! விளையாட்டுக்குக் கூட உளறிக் கொட்டிடாதிங்க''

''ஏன்? உண்மைதானே அது?''

''சரி. சொல்றதுக்கான சந்தர்ப்பம் இல்லையா? என்னை இன்னும் விரல் போடற பாப்பான்னு நினைச்சிட்டிருக்கார்



எங்கண்ணன். எம்மேல எக்கச்சக்கமான பாசம் இருக்கு. அதே சமயம் கண்டிப்பும் இருக்கு. எனக்கு பயம்மா இருக்கு. தெரியறப்போ அவரோட ரியாக்ஷன் எப்படி இருக்குமோ?''

''இத பாரு, இந்தியாவுல 'பயம்'ங்கிற வார்த்தையை யூஸ் பண்ற ஒரேப் பொண்ணு நீயாத்தான் இருப்பே'' என்று சிரித்த பாலாஜியின் ஒரு பக்கத்து மீசையைச் செல்லமாக இழுத்தேன்.

''கொஞ்சம் ட்ரிம் பண்ணுங்கன்னு சொன்னேன்ல?''

''குத்தாது ராஜி''

''ச்சீ ! இன்னும் லுக்கா இருக்குமேன்னு சொன்னேன்''



நியூஸ் ரீல் போட்டு விளக்க ணைத்ததுமே பாலாஜி என் இடது கையைத் தன் வலது கையால் கோர்த்துக் கொண்டார். தோளோடு தோள் உரச நெருங்கி அமர்ந்தார்.

''ராஜி!''

''ம்..''

''எவ்வளவு ஸாஃப்ட்டா இருக்கு உன் கையி''

''சரி''

''எனக்கொரு சந்தேகம்''

''என்ன?''

''கை மட்டும்தான் ஸாஃப்ட்டுன்னு சொல்றேன்''

"சரி இருந்துட்டுப் போகுது"

"ஒரு சந்தேகம் வந்திடுச்சின்னா அதை நிவர்த்தி செஞ்சுக்க வேணாமா?"

"ஏய்! சும்மா இருங்க"

''பின்னே தியேட்டருக்கு எதுக்கு வந்தமாம்?"

"படம் பார்க்க!"

''நானா வேணாங்கறேன். நீ நல்லா பாரு."

பாலாஜியின் விரல்கள் நண்டு ஊறுது, நரி ஊறுது என்று என் உடம்பின் தடை செய்யப்பட்ட பகுதிகளில் எல்லாம் உலவி.. நான் கிறங்கி, உதட்டைக் கடித்து...



''ஏய்! வேணாம் ப்ளீஸ்..'' கெஞ்ச வேண்டியதாய் போயிற்று.

படம் முடிந்து காரில் திரும்பினபோது நான் சொன்னேன்.

''எனக்கு இந்த திருட்டுத்தனம் பிடிக்கலைங்க''

"ச்சீ! பப்ளிக்கா அப்படி நடந்துகிட்டா நல்லா இருக்காது''

''நாம கல்யாணம் செய்துக்கலாம்''

''இன்னைக்குத்தான் உரைச்சுதா? நான்தான் ரொம்ப நாளா காத்துக்கிட்டிருக்கேனே.. என் வீட்ல எந்த பிரச்னையும் இல்லை. ஒரு ஜ ரிக்கடை பொம்மைய அழைச்சுட்டு போயி எங்கம்மா கிட்ட 'இதுதாம்மா உன் மருமக'ன்னு சொன்னாலும் 'வலது காலை எடுத்து வச்சி உள்ளே வாம்மா'ன்னு சொல்லுவாங்க. நீதான் அண்ணன்கிட்ட சமயம் பார்த்து சொல்லணும்னு சொல்லி தள்ளிப் போட்டுகிட்டு இருக்கே''

''வர்ற வெள்ளிக்கிழமை எங்கண்ணனுக்கு பர்த்டே. வீட்ல ஒரு பார்ட்டி ஏற்பாடு பண்ணிருக்கார். அவரோட ஃப்ரெண்ட்ஸ் எல்லோரையும் இன்வைட் பண்ணிருக்கார். ரொம்ப சந்தோஷமான மூடுல இருப்பார். பார்ட்டி முடிஞ்சி எல்லாரும் போனதும் நிச்சயமா பேசப் போறேன்."

''வெரிகுட், ஆல் தி பெஸ்ட்'' என்றார் பாலாஜி.



என் அண்ணனின் பிறந்த நாளுக்காக அவரை விட அதிக ஆர்வமாக நான்தான் காத்திருந்தேன். 'என்ன சொல்வார்'' என்று அடிவயிற்றில் ஒரு கத்தி இருந்தது.




அந்த வெள்ளிக்கிழமையை என்னால மறக்கவே முடியாது. வீடு முழுக்க வர்ணக் காகிதங்களை நானும் வேலைக்கார பெண்ணுமாக சேர்ந்து வளைவு

வளைவாகத் தொங்கவிட்டோம்.

மொட்டை மாடியில் வாடகைக்கு ஷாமியானா எடுத்துக்கட்டி, நாற்காலிகள் போட்டிருந்தோம்.

அண்ணன் நூறு இன்விடேஷன் அச்சடித்து எல்லாவற்றையும் விநியோகம் செய்திருந்தார். முக்கியமானவர்களின் டெலிபோன் நம்பர்களை என்னிடம் கொடுத்து போனில் ஒருமுறை நினைவூட்ட சொல்லியிருந்தார்.

"என்னோட தொழில்ல இருக்கிற சில கஸ்டமர்களுக்கு பார்ட்டி தரணுங்கிறதுதான் என் குறிக்கோள். அதுக்கு இந்த பர்த்டேயை ஒரு சாக்கா பயன்படுத்திக்கிறேன்" என்றார் அண்ணன்.

"நான் இருக்கணுமா?" என்றேன்.

"ஏன்?"

"உங்களுக்கும், உங்க ஃப்ரெண்ட்சுக்கும் சங்கடமா இருக்கும். ஹாட் ட்ரிங்க்ஸ் குடிக்க தயங்குவீங்க."

"நோ! நோ! இந்தப் பார்ட்டியல அதெல்லாம் கிடையாது. சரவண பவன்ல வெஜிடேரியன் அயிட்டம்ஸ்தான் ஆர்டர் பண்ணிருக்கேன். சுத்தமான பார்ட்டி இது. யாருக்கும் எந்த சங்கடமும் இல்லை. நீ கண்டிப்பா இருக்கணும். அஃப்கோர்ஸ்... நீதான் மெயின் எண்டர்டெய்ன்மெண்ட் தரப்போறே" என்றார் அண்ணன்.

"நானா?"





"யெஸ், உன் வயலின் வித்தை எல்லாம் அரை மணி நேரம் காட்டு. வயலின்ல வெஸ்டர்ன் மியூசிக் போடுவியே... நான் பெற்ற இன்பம் என் நண்பர்களும் பெறட்டும் இன்னைக்கு.."

"போங்கண்ணா... எனக்கு வெக்கமா இருக்கு."

"ச்சீ! இதில என்ன வெக்கம். எல்லாரும் என்னோட நெருக்கமான ஃப்ரெண்ட்ஸ், ரொம்ப டீஸண்ட்டானவங்க. டெலிவிஷன் ப்ரட்யூசர் ஒருத்தரையும் இன்வைட் பண்ணிருக்கேன். நீ அட்டகாசமா வாசிச்சா, டி.வி.ல நான் சான்ஸ் வாங்கித் தர்றேன்."

"அப்படின்னா ஒக்கே.." என்றேன் உற்சாகமாக.

நான் காசி செட்டித் தெரு சென்று ஒரு வெளிநாட்டு கூலிங் கிளாஸ் வாங்கி பூக்காகிதம் சுற்றி ரகசியமாக வைத்திருந்தேன்.

பார்ட்டி முடிந்து எல்லோரும் சென்றதும் அண்ணனுக்கு தனிப்பட்ட முறையில் ஸ்பெஷலாக வாழ்த்துச் சொல்லி, பரிசளித்துவிட்டு, விஷயத்தைத் துவங்க வேண்டும்.

மாலை ஏழு மணிக்கு என்று அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்தோம். ஆறரை மணிக்கு பேக்கரியில் இருந்து ஆர்டர் செய்த கேக்கை டெலிவரி

செய்தார்கள்.

அண்ணன் சந்தன நிறத்தில் புதிய பேண்ட், முழுக்கை சட்டை அணிந்திருந்தார். மொட்டை மாடியில் கொண்டு வந்து பொருத்தப்பட்ட ஸ்பீக்கரில் மேற்கத்திய சங்கீதம் சன்னமாக ஒலித்துக் கொண்டிருந்தது.

நான் பட்டுப்புடவை கட்டியிருந்தேன். வட்டமாகக் குங்குமப் பொட்டு வைத்து, லேசாக லிப்ஸ்டிக் போட்டுக் கொண்டு, என்னுடைய கம்பெனிக்காக வரவழைத்திருந்த பக்கத்து வீட்டு தோழி பாமாவுடன் நின்றிருந்தேன்.

''கல்யாணப் பொண்ணு மாதிரி இருக்கே'' என்றாள் அவள்.



பத்து நிமிடத்தில் பைக்குகளிலும், கார்களிலும் அண்ணனின் நண்பர்கள் வரத் துவங்கினார்கள். நாங்கள் உற்சாகமாக வரவேற்றோம். ஒவ்வொருவராக வந்த போது அண்ணன் அவர்களை அறிமுகம் செய்து வைத்தார். வீடியோக்காரர் ஓரமாக நின்று பதிவு செய்தார்.

பிறகு, ஒரே சமயம் ஏழெட்டு பேர் வரத் துவங்கினார்கள்.

ஏழு மணிக்கு மொட்டை மாடியின் நாற்காலிகள் நிரம்பி வழிந்தன. நடுவில் போடப்பட்ட மேஜையில் கேக்கில் பொருந்தியிருந்த மெழுகுவர்த்திகளை நான் கொளுத்தினேன்.



எல்லோரும் சூழ்ந்து நின்று கொண்டு, 'ஹேப்பி பர்த் டே டு யூ' என்று கோரஸாகப் பாடத் துவங்க...

அண்ணன் மெழுகுவர்த்திகளை ஊதி அணைத்து, கேக் கட் செய்து முதல் துண்டை என் வாயில் வைக்க...

கேமிரா பளிச்சிட்டது. எல்லோரும் கை தட்டினார்கள். கை குலுக்கினார்கள். கொண்டு வந்த பரிசுகளைக் கொடுத்தார்கள். வாங்கி வாங்கி அண்ணன் என்னிடம் கொடுக்க, நான் வேலைக்கார பெண், பாமா மூலம் கிழே அனுப்பிக் கொண்டிருந்தேன்.

முகத்தின் குறுக்கே விழுந்த கூந்தல் கற்றையை ஒதுக்கிவிட்டுக் கொள்ளும் போது.. அவனைப் பார்த்தேன்.



அவன் பார்வையை விலக்கிக் கொள்ளாமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் இந்த பார்ட்டிக்கு வந்ததிலிருந்தே பார்க்கிறேன். கொஞ்சம் கூட நாகரீகம் இல்லாமல் என்னையே உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

நான் திரும்பிப் பார்த்த போதாவது பார்வையை விலக்கி கொள்வது என்கிற பண்பு இல்லை.

இதற்கு முன்பாகப் பெண்களையே பார்த்திராதவன் போல அப்படி ஒரு பார்வை!

எனக்கு அவன் மேல் எரிச்சலாக வந்தது.

"ஏதாச்சும் ஒரு மியூசிக் பார்ட்டி ஏற்பாடு செஞ்சிருக்கலாம்" யாரோ சொன்னதற்கு..

என் அண்ணா சொன்னார். "ஏற்பாடு செஞ்சிருக்கேனே, இப்போ என் தங்கை ராஜி வயலின் வாசிப்பா, அது உங்களை மகிழ்விக்குமா, பாடாப்படுத்துமான்னு தெரியாது". கைதட்டினார்கள்.

எல்லோரும் பார்க்கும்படியாக ஒரு ஓரத்தில் நாற்காலியில் நான் அமர்ந்து வயலினைக் கையில் எடுத்தேன். வாசிக்கத் துவங்கினேன்.

நடுவில் நான் நிமிர்ந்து பார்த்த போதெல்லாம் அவன் என்னையேதான் பார்த்துக் கொண்டிருந்தான். எனக்குக் குறுகுறுவென்று இருந்தது.

அவன் பார்வையில் சுத்தம் இல்லை. அவன் மனசுக்குள் என்னை இந்த நிமிடம் நிச்சயமாக அலங்கோலமாக கற்பனை செய்து பார்த்துக் கொண்டிருக்கிறான் ராஸ்கல்!

ஆனால் கேட்க முடியாது! அறையலாம்? சூழ்நிலையின் உற்சாகம் பறிபோய் அநாவசியமாக எல்லோருடைய மூடும் கெடும்.

அவன் என்னைப் பார்க்கிறானோ இல்லையோ நான் பார்ப்பதில்லை என்று தீர்மானித்துக் கொண்டேன்.

மனதை வயலினில் பதித்து வாசித்து முடித்ததும் எல்லோரும் ஒரு நிமிடத்திற்கு இடைவிடாமல் கைதட்டினார்கள்.





அண்ணன் அறிமுகப்படுத்திய டி.வி. தயாரிப்பாளர் என்னிடம் வந்து "பிரமாதமா வாசிக்கிறேம்மா. நான் தேதி முடிவு பண்ணிட்டு சொல்றேன். வந்து டி.வி. ஸ்டேஷன்ல வாசிம்மா. டெலிகாஸ்ட் பண்றோம்" என்றார்.

"ரொம்ப தேங்க்ஸ் சார்"

உணவு பரிமாறப்பட்டது. ஐந்து வகை சாதங்கள், இனிப்பு, காரம், ஐஸ்கிரீம் இறுதியில் பீடா என்று வழங்கப்பட்டது.

நான் கீழே இறங்கி வந்து பட்டுப் புடவையில் இருந்து சுரிதாருக்கு மாறினேன். பரிசுப் பார்சல்களை ஒரு பக்கமாக அடுக்கி வைத்தேன்.

அண்ணன் நண்பர்கள் ஒவ்வொரு வராகப் புறப்பட துவங்கினார்கள். மோட்டார் பைக்குகளும், கார்களும் புறப்பட்டுக் கொண்டிருந்தன. சிலர் என்னிடம் வந்து 'போய்ட்டு வர்றேங்க' என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

மாடியிலிருந்து அவன் இறங்கி வந்தான். என்னையே பார்த்துக் கொண்டு இறங்கி வந்தான். நேராக என் அருகில் வந்தான்.

"யு ஆர் ஸோ ப்யூட்டிஃபுல்" என்றான்.

"தேங்க்யூ" என்றேன் பல்லைக் கடித்துக் கொண்டு.

''ஒன் மினிட்'' என்றவன் சட்டென்று எனது சுரிதாரின் துப்பட்டா முனையில் பிசிறிக் கொண்டிருந்த ஒற்றை நூலை இழுத்து அறுத்துக் கொண்டான். ''உங்க ஞாபகத்துக்கு'' என்று தன் பாக்கெட்டில் அந்த நூலை வைத்துக் கொண்டு வேகமாகப் போய்விட்டான்.

எனக்கு இப்போது அவன் மேல் கோபம் போய் சிரிப்புதான் வந்தது. மண்டையில் லேசாக விரிசல் விழுந்திருக்கிறது போலிருக்கிறது. யார் இவன்? அண்ணனிடம் விசாரிக்க வேண்டும்.

எல்லோரும் புறப்பட்டுச் சென்றதும், அண்ணன் வீட்டுக்குள் வந்து ஹாயாக ஸோபாவில் உட்கார்ந்தார்.

''ஒருத்தர் பாக்கிவிடாம எல்லோரும் உன்னைப் பாராட்டினாங்க ராஜி'' என்றார். ''ஏன் பட்டுப் புடவையிலேர்ந்து மாறினே? மங்களகரமா இருந்தே''

''கசங்கிடும்''

''கசங்கினா அயர்ன் பணணிட்டுப் போறோம். உக்காரு''

அவர் அருகில் அமர்ந்தேன்.

''பட்டுப் புடவையில உன்னைப் பார்த்ததும்தான் நான் ஒரு பெரிய தப்பை செய்துகிட்டிருக்கேன்னு புரிஞ்சது''

''என்னண்ணா சொல்றிங்க?''

''உன் கல்யாணத்தைப் பத்தி நினைக்காம இருந்திருக்கேன் பாரு.''



மௌனமாக இருந்தேன். இது சரியான சந்தர்ப்பம். சொல்லிவிடலாமா? எச்சில் விழுங்கினேன்.

''உனக்குத் தீவிரமா மாப்பிள்ளை பார்க்கலாம்னு நினைக்கிறேன் ராஜி.''

''நீங்க பார்க்கிற மாப்பிள்ளைக்கு என்ன என்ன தகுதிகள் இருக்கணும்னு சொல்லுங்கண்ணா பார்க்கலாம்''

''சொல்லட்டுமா? உன் பக்கத்தில நின்னா பொருத்தமா இருக்கணும். அதனால மாப்பிள்ளை அழகா இருந்தே ஆகணும்''

''அப்புறம்?''

''வெறும் அழகு மட்டும் போதாது. படிச்சிருக்கணும். நிலையான நல்ல வருமானம் இருக்கணும். கெட்டப் பழக்கங்கள் இல்லாதவரா இருக்கணும். ஸாஃப்ட் டைப்பா இருக்கணும்.

''நான் ஒருத்தரை உங்களுக்கு அறிமுகப்படுத்தறேன். நீங்க அவரோட பேசிப் பாருங்க. உங்களுக்கு அவரைப் பிடிக்கும். நிச்சயம் பிடிக்கும்.''

சில விநாடிகள் பேச்சில்லாமல் என்னைப் பார்த்தார் அண்ணன்.

''ஓஹோ. செலக்ட் பண்ணிட்டியா?''

''அய்யோ! இல்லைண்ணா. நீங்க சரின்னாதான்''

''யாரு?''

பாலாஜியைப் பற்றிச் சொன்னேன்.

''நான் சொன்ன எல்லா தகுதிகளுமே

இருக்கும் போலிருக்கு? ராஜி, நீதப்பு செய்ய மாட்டேங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு. உனக்குப் பிடிச்சவரை நிச்சயம் எனக்குப் பிடிக்கும். ஆனா அந்த பாலாஜியோட பேசிப் பார்த்துட்டுதான் என் முடிவைச் சொல்வேன்'' என்றார் அண்ணன்.

நான் முகம் மலர்ந்து சிரித்து, ''எப்போ வரச் சொல்லட்டும்?''

''போ! இப்பவே அவரைக் கூட்டிட்டு வா'' என்று கார் சாவியைக் கொடுத்தார் அண்ணன்.

''தேங்க்யூ'' என்று துள்ளலாகப் புறப்பட்டேன்.






கடல் அலைகள் தத்திக் தத்தி வந்தன. மணல் வெளியில் லட்சம் பாத அச்சுகள். நிலா தேய்ந்திருந்தது. என் மடியில் பாலாஜி படுத்து கொண்டு என் கழுத்துச் செயினின் டாலரை நிமிண்டியபடி.

''உங்கண்ணன் எடக்கு மடக்கா கேப்பாரோன்னு நினைச்சிட்டிருந்தேன். ரொம்ப பிரியமா, இயல்பா பழகினார்.



இப்படி ஒரு அண்ணன் கிடைச்சா நான் அடுத்த ஜென்மத்தில் அவர் தங்கையா பொறப்பேன்''

''பார்த்தீங்களா? அன்னைக்கு சொன்னது பொய்யா?'' என்று செல்லமாகச் சிணுங்கி அவன் தலையைக் கலைத்தேன்.

''என்னைக்கு? என்ன சொன்னேன்?''

''ஏழு ஜென்மமும் நான்தான் உன் காதலன்னு சொல்லிட்டு இப்ப திடீர்னு அடுத்த ஜென்மத்தில எனக்கு அக்காவா பொறக்கறேன்னு சொல்றீங்களா...''

''அசடு! அடுத்த ஜென்மத்தில நீ எங்க குடும்பத்தில ஆம்பளையா பொறந்தா சரியாப் போச்சு''



''அப்போ அடுத்த ஜென்மத்தில நான் சினிமாவுக்கு அழைச்சிட்டுப் போயி கண்ட இடத்திலயும் தொடுவேனாம். நீங்க சிணுங்குவீங்களாம். கற்பனை நல்லா இல்லே?''

''டாலர்ல மொத்தம் எத்தனை முத்து ராஜி?''

''ஏய்! கையை எடுங்க முதல்ல''

''அதான் உங்கண்ணன் பச்சை சிக்னல் காட்டிட்டாரில்ல?''

''அதுக்காக? கடற்கரையில லிமிட் தாண்டுங்கன்னா சொன்னார்?''

''இதெல்லாமா சொல்வார்? ராஜி!''

''ம்?''

"ஹனிமூன் எங்கே போலாம்?"

"நீங்களே சொல்லுங்க"

"கொடைக்கானல்?"

"போலாம். எனக்கு கோவா பார்க்கணும்னு ஆசை"

"அதுவும் போலாம். பதினைஞ்சு நாள். இங்கே ஒரு வாரம். அங்கே ஒரு வாரம். அரை செஞ்சுரியாவது சாதிசிட்டுதான் ஊர் திரும்பணும்"

"ச்சி! பேச்சைப் பாரு"

"டிராவலுக்கு மட்டும் ஒரே ஒரு டிரஸ் போதும்"

"மிச்சம் அங்கங்கே வாங்கிக்கிறதா?"

"அசடு! ஹனிமூன் தம்பதிக்கு அவசியமா என்ன?"

"போங்க! ரொம்ப நெளிய வைக்கிறீங்க"

மழைக்கான அறிவிப்பாக முதல் துளியை உணர்ந்ததும் இருவரும் எழுந்து கொண்டோம். இடையில் கை கோர்த்து சாலையில் நிறுத்தியிருந்த காருக்கு நடந்தோம்.

நான் காரை ஓட்டினேன். பாலாஜியை அவர் வீட்டு வாசலில் இறக்கி விட்டுவிட்டு நான் வீட்டிற்கு வந்தபோது, அண்ணன் இன்னும் வந்திருக்கவில்லை. என்னிடம் இருந்த சாவியை போட்டுத் திறந்து உள்ளே வந்து கை, கால்கள் கழுவினேன். பிரெட்டில் ஜாம் தடவி



எடுத்துக் கொண்டு டிவியைப் போட்டுக் கொண்டு அமர்ந்தேன்.

ஒலித்த போனை எடுத்தேன்.

"ஹலோ, மிஸ் ராஜி ப்ளீஸ்.." அறிமுகமில்லாத புதுக்குரல்.

"ராஜிதான் பேசறேன்.. நீங்க யாரு?

"உன்னை எச்சரிக்க விரும்பறவன்"

"என்ன சொல்றீங்க?"

"அந்த பாலாஜிங்கிற பொறுக்கிப் பயலோட சுத்தாதேன்னு சொல்றேன்"

"ஏன்?"

"எனக்குப் பிடிக்கலை"

"நீ யாரு?"

"உன்னோட ராஜகுமாரன்"

"உளறாதே! உனக்கு என்ன வேணும்"

"பாலாஜியை நீ மறக்கணும்"

"நடக்கற விஷயமில்லை"

"அவன் நல்லவன் இல்லை"

"நீ நல்லவனா?"

"இருநூறு சதவீதம்"

"எந்த நல்லவனும் தன்னை அடையாளப்படுத்திக்காம கோழை மாதிரி பேசமாட்டான்"

"என்னை உனக்குப் பிடிச்சிருக்குன்னு சொல்லு. நான் யாருன்னு சொல்றேன்"

"முன்னே பின்னே பார்க்காத ஒருத்தனைப் பிடிச்சிருக்குன்னு சொல்ல எனக்கென்ன பைத்தியமா?"

"நீ என்னைப் பார்த்திருக்கே"

"எங்கே, எப்போ?"

"யோசனை பண்ணிப் பாரு. ஞாபகம் வரும். ராஜி. அந்த பாலாஜி கெட்டவன். பொம்பளைங்க விஷயத்தில மகா மோசம்"

"அடடே! இத்தனை நாளா பழகறேன் - எனக்குத் தெரியாம போச்சே!"

"அவன் உன்னை நல்லா ஏமாத்திருக்கான்"

"சரி, இருந்துட்டு போகட்டும்"

"என் வார்த்தையை அலட்சியப் படுத்தாதே"

"கொஞ்சம் முன்னாடியே சொல்லியிருக்க கூடாதா?

"ஏன்?"

"நானும், பாலாஜியும் கல்யாணம் பண்ணிக்கிறதா தீர்மானிச்சாச்சு. எங்க ரெண்டு பேர் வீட்லயும் சரி சொல்லிட்டாங்களே.."

"அவ்வளவுதானே? இன்னும் தாலி கட்டலியே"

"கட்டிக்கிறேன்னு வாக்கு கொடுத்தாச்சே"

"வாக்கு முக்கியமா? வாழ்க்கை முக்கியமா?"

"சும்மா டயலாக் நீட்டிக்கிட்டேப் போகாதே. இந்த மாதிரி மொட்டை மிரட்டலுக்கெல்லாம் முக்கியத்துவம்



கொடுக்கறவ நான் இல்லை".

"அப்போ உறுதியா தீர்மானிச்சிட்டியா?"

"ஆமாம். ஆமாம் வெச்சிடவா?"

"இரு ராஜி, நீ அவனை கல்யாணம் செய்துக்கக் கூடாது. இப்போ இதமா சொல்லிட்டேன். கேக்கலைன்னா அடுத்த கட்டத்துக்கு நான் வரணும்"

"நீ கட்டம், வட்டம், முக்கோணம் எதுக்கு வேணும்னாலும் வா"

"சரி பார்க்கலாம் நீ எப்படி அவனை கட்டிக்கிறேன்னு"

"தாலி கட்டிதான். அட்ரஸ் சொன்னா இன்விடேஷன் அனுப்பி வைக்கிறேன். வந்து பாரு"

"ராஜி, பேச்சு முடிஞ்சது. இனிமே செயல்தான். குட்நைட்"

"அந்த மேனர்ஸ்கூட உனக்குத் தெரியுமா? குட் நைட்"

வார்த்தைக்கு வார்த்தை பதிலடியாக, இடக்காகப் பேசிவிட்டு போனை வைத்தாலும், எனக்குள் ஒரு சின்ன படபடப்பு ஆரம்பமாகியிருந்தது.

யாரிவன்? என்ன ரகம்? எதற்காக இப்படி முட்டாள்தனமாக போனில் மிரட்டு கிறான்? பாலாஜிக்கு வேண்டாதவனா?

அழைப்பு மணி கேட்டுப் போய் திறந்தேன். அண்ணன் உள்ளே வந்தார்.

"ராஜி, என்ன முகம் ஒரு மாதிரி இருக்கு?" என்றார்.

"அண்ணா, ஒரு போன் வந்திச்சி"

"யாரு?"

"தன்னை அறிமுகம் செஞ்சுக்கலை. ஆனா மிரட்டலாப் பேசினான்" என்று துவங்கி எல்லாவற்றையும் சொன்னேன்.

அண்ணன் சிந்தனையுடன் மோவாயை தடவியபடி அமர்ந்துவிட்டார்.

"ராஜி, நீ அவ்வளவு தூரம் சவடாலாப் பேசியிருக்கக் கூடாதோன்னு எனக்குப் படுது"

"ஏன் அப்படிச் சொல்றிங்க?"

"பாலாஜியைப் பத்தி தப்பா சொல்றியே, அவர் நல்லவன் இல்லைன்னு உன்னால் நிருபிக்க முடியுமான்னு நீ கேட்டிருக்கணும்"

"அண்ணா! எனக்கு பாலாஜி மேல கொஞ்சமாவது சந்தேகம் இருந்தாதானே நான் அப்படி கேக்க முடியும்?"

"ராஜி, நான் சொல்றதுக்காக நீ தப்பா எடுத்துக்கக் கூடாது. உனக்கு பாலாஜி மேல எக்கச்சக்கமான காதல். அதனால அவருக்கு இன்னொரு முகம் இருக்கிறது உனக்குத் தெரியாமக்கூட இருக்கலாம்".

"அண்ணா! நீங்க பாலாஜியை சந்தேகப்படறீங்களா?"

"மனுஷ மனசு அப்படிம்மா! என் மனசுல



இந்த போன்கால் போட்டுட்ட ஒரு சந்தேக விதையை தவிர்க்க முடியாது. இவன் யாரோ, எதுக்காக பேசினானோ, ஆனா ஒரு வேளை பாலாஜியைப் பற்றி இன்னும் சரியா நாலு பேர்கிட்ட விசாரிக்கணுமோன்னு ஒரு எண்ணம் ஏற்படறது நிஜம்"

"தேவையே இல்லை. இது எவனோ ஒரு விஷமக்காரன் பேசற பேச்சு. இவனுக்கு என் மேல ஒரு கண்ணுன்னு பேச்சுலேயேப் புரியுது" என்றேன்.

வெகு நேரம் அமைதியாக இருந்தார் அண்ணன்.

"மறுபடி போன் செய்யறதா சொன்னானா?"

"இல்லை, பேச்சு முடிஞ்சது. இனிமே செயல்னு சொன்னான்"

"அப்படின்னா?

"எனக்குப் புரியலை"

"அந்தக் குரல் புதுசா?"

"ரொம்பப் புதுசு. நான் கேட்டதே இல்லை"

"ஆனா ஒரு தடவை பார்த்திருக்கோம்னு சொன்னான். இல்லே.

"ஆமாம்"

"யோசிச்சுப் பார்த்தியா?"

"புரியலைண்ணா"

"புதுசா ஒரு குழப்பம் ஆரம்பிச்சி

ருக்குதே. இப்போ மேற்கொண்டு என்ன செய்யறது? எப்படி தெளிவுபடுத்திக்கிறது?''

''ஒரு குழப்பமும் இல்லை. எனக்கு பாலாஜி மேல எள்முனை அளவுகூட சந்தேகமில்லை. இது பாலாஜி மேல பொறாமை உள்ள யாரோ செஞ்ச விஷமம். இந்த போனுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியமில்லைங்கிறது என் அபிப்ராயம்'' என்றேன் தெளிவாக.

என்னை அண்ணன் கூர்ந்து பார்த்தார்.

''ஒருவேளை அவன் மறுபடி போன் செஞ்சா...''

''செஞ்சா?''

''ஆதாரத்தோட நிரூபின்னு சொல்லு ராஜி''

''சற்றே யோசித்துவிட்டு ''சரி'' என்றேன்.

''இந்த போன் பத்தி நாளைக்கு பாலாஜியை சந்திக்கிறப்ப...''

''சொல்லலை. பாவம்! அவர் மனசு கஷ்டப்படும்''

''மண்டு! சொல்லு! அப்பத்தான் அவருக்கு யாராவது எதிரி இருந்தா அதை அவர் சொல்லுவார். நமக்குக் குழப்பம் தெளிவாகும்'' என்று அண்ணன் சொன்னது நியாயமாக இருந்தது.

''சரி'' என்று தலையசைத்தேன்.






மறுநாள் நான் பாலாஜியின் ஆபீசுக்குப் போன் செய்தேன்.

''ஹாய் ஸ்வீட், சொல்லு'' என்றார் பாலாஜி.

''உங்களைக் குற்றவாளிக் கூண்டில நிறுத்திக் கேள்வி கேக்கப் போறேன். நீங்கதான் விளக்கம் சொல்லணும்'' என்றேன்.

''மழை பெய்ய ஆரம்பிச்சதும் நாம ரெண்டு பேரும் யோக்யமா எழுந்து வந்துட்டமே. அதுக்கப்புறம் நான் எதுவுமே செய்யலையே டார்லிங்.''

''கொஞ்சம் சீரியஸான விஷயம். உடனே உங்களைப் பார்க்கணும்.

''புறப்பட்டு வா. ஒரு மணி நேரம் பர்மிஷன் போட்டுட்டு வர்றேன். பக்கத்தில ஐஸ்கிரீம் பார்லர் போயிடலாம்''

''ஓக்கே'' என்று காரெடுத்துக் கொண்டு பாலாஜியின் ஆபீசுக்குப் போனேன்.

பாரிஸ் கார்னரில் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் கட்டிடத்திற்கு அருகில் அவருடைய

அலுவலகக் கட்டிடம், மூன்றாவது மாடிக்கு வந்து குளிர் செய்யப்பட்ட அவருடைய தனியறைக்குள் வந்தேன்.

கீபோர்டை மடியில் வைத்துக் கொண்டு ஸ்கீரினில் வித்தை காட்டிக் கொண்டிருந்த பாலாஜி, ''சீரியஸாய் பேசணும்னு சொல்லிட்டு இப்படி அசத்தலா டிரெஸ் பண்ணிக்கிட்டு வந்தா எப்படி? மனசு அனாவசியத்துக்குக் கெட்டு போகுதில்லே? வா, போலாம்'' என்று சுவிட்ச்சுகளை அணைத்து விட்டு எழுந்து கொண்டார்.

வழக்கமாக நாங்கள் செல்லும் அந்த ஐஸ்கிரீம் பார்லருக்குச் சென்றோம். மைக்கேல் ஜாக்ஸனின் ஆளுயரப் படம் கட் அவுட் போல ஒரு பக்கம் வைக்கப்பட்டிருந்தது. ஒரு பக்கம் ப்ரூஸ்லி. ஒரு பக்கம் சமந்தா பாக்ஸ், இன்னொரு பக்கம் ஸ்டாலின்.



''இந்த பார்லர்ல இந்த கட்-அவுட்ஸ் தான் எனக்கு ரொம்ப உறுத்தலா இருக்கும்'' என்றார் ஆர்டர் சொன்ன பாலாஜி.

''ஏன்?''

''சாப்பிட வர்றவன் நம்ம ஆளு. ஒரு இந்திய மூஞ்சாவது இருக்கா?''

''இளைஞர்களோட டேஸ்ட்க்கு வெச்சிருக்காங்க.''

''சிலுக்கு ஸ்மிதா, கமல்ஹாசன், அரவிந்த்சாமி, சல்மான்கான் இப்படி வைக்க வேண்டியதுதானே?''

''இருக்கட்டும். நீங்க இது வரைக்கும் எத்தனை பொண்ணுங்களோட வாழ்க்கையை நாசம் பண்ணியிருக்கிங்க?''

''என்ன பேச்சு இது?''

''பொம்பளைங்க விஷயத்தில மோசம்னா என்ன அர்த்தம்?''

''என்னாச்சு உனக்கு? ஏன் உளர்றே?''

''உங்களைப் பத்தி அப்படி ஒரு அபிப்பிராயம் சொன்னார் ஒருத்தர்''

''எந்தத் திருட்டு ராஸ்கல் அந்த மாதிரி சொன்னது?''

''அவன் பேர் தெரியலை'' என்று போன் விபரங்கள் முழுவதும் விடாமல் சொன்னேன்.



''அவன் யாருன்னு உனக்குப் புரியலை ராஜி?''

''இல்லையே''

''ஒரு தடவைப் பார்த்திருக்கிறதா சொல்லியிருக்கானே...''

''நானும் யோசனை பண்ணிப் பார்த்துட்டேன். தன் பேரை மட்டுமாவது அவன் சொல்லியிருந்தா ஓரளவாவது ஞாபகம் வந்திருக்கும்''

''விடு! கைல பொம்பளைங்களோட போன் நம்பர் கிடைச்சா வாய்க்கு வந்தபடி பேசற சில பொறுக்கிங்க இருக்கானுங்க''

''நானும், நீங்களும் லவ் பண்றதை

தெரிஞ்சி பேசறானே...''

''அதான் புரியலை.. ராஜி, என் ஆபீஸ்ல நம்ம லவ் கிட்டதட்ட அத்தனை பேருக்கும் தெரியும். நீ பலதடவை என் ஆபீசுக்கு வந்திருக்கே. பல பேருக்கு உன்னை அறிமுகப்படுத்திக்கூட வெச்சிருக்கேன். அவங்கள்ல யாரோ சில சில்மிஷ மனசுக்காரன் இப்படி செஞ்சிருப்பானோ?''

''இருக்கலாம்''

''இக்னோர் இட். கவலைப்பட்டியா?''

''சேச்சே! உங்களைப் பத்தி எனக்குத் தெரியாதா? ஆனா அண்ணனுக்கு லேசா ஒரு சந்தேகம் வந்திடுச்சி. அவர் உங்ககூட அதிகம் பழகலையே...''

''போச்சுடா! புறப்படு''

''எங்கே?''

''முதல்ல உங்க அண்ணனைப் பார்த்து 'தைரியமா இருங்க, நான் அப்படிப்பட்ட ஆளில்லை'ன்னு சொல்லிட்டு அவரை எங்க வீட்டுக்கு அழைச்சுட்டு வந்து அம்மாகிட்ட அறிமுகப்படுத்திடறேன்''

''அண்ணன் காலைல புறப்பட்டு திருச்சி போயிருக்கார்''

''எப்ப வருவார்?''

''நாளைக்குக் காலைல ராக்போர்ட் எக்ஸ்பிரஸ்ல திரும்பிடறார்''

''மறுபடி போன் செய்றதா சொன்னானா அவன்?''



''அப்படி சொல்லலை அவன்''

''மறுபடி பேசினா குழைவாய் பேசி அவன் யாருன்னு தெரிஞ்சுக்க பாரு. அவன் பல்லுல பாதியாவது கழட்டணும். அநாவசியமா என்னைப் பத்தி தப்பான இமேஜை ஏற்படுத்தறான் பாரு!''

''ஏற்படுத்திடலைங்க. ஏற்படுத்த முயற்சி செஞ்சான்' என்று புன்னகைத்தேன்.

''இருந்தாலும்.. இது ரொம்ப பேட் மேனர்ஸ் இல்லையா?'' என்று ரொம்ப வருத்தப்பட்டுப் பேசின பாலாஜியை நான் சமாதானப்படுத்த வேண்டியதாயிற்று.

பாலாஜியை அவருடைய ஆபீசில் விட்டுவிட்டு நான் வீட்டுக்குத் திரும்பி சாவி போட்டு கதவைத் திறந்த போதே, உள்ளே டெலிபோன் ஒலித்துக் கொண்டிருந்தது.

நான் அவசரமாகத் திறந்து, அவசரமாக செருப்புகளை உதறி, கொஞ்சம் ஓட்டமாக வந்து ரிசீவரை எடுத்தேன்.

''ஹலோ, ராஜியா?'' அவனேதான்.

''ஆமாம்,'' ராஜகுமாரனா?

''யோசனை செஞ்சியா?''

''எதைப் பத்தி?''

''பாலாஜியை மறக்கறதைப் பத்தி''

''இத பாருங்க, நேத்து நீங்க போன்ல பேசினப்ப முதல்ல ஒரே கோபமா வந்திச்சி, நிதானமா யோசிசப்ப

குழப்பமாகிடுச்சி. ஒருவேளை இருக்குமோன்னு ஒரு கேள்வி வந்திடுச்சி'' என்று பொய் பேசினேன்.

''குழப்பம் வந்துட்டாலே தெளிவும் வந்துடும். பாலாஜி யாரு ஆஃப்டர் ஆல் கை கட்டி சம்பளம் வாங்கறவன். நான் பல பேருக்கு சம்பளம் கொடுக்கறவன், என்னை கல்யாணம் செய்துகிட்டா உன்னை ராஜகுமாரி மாதிரி வெச்சிக்கிடுவேன் ராஜி. வேளைக்கு ஒரு கார்ல போகலாம்.

''இத பாருங்க, முதல்ல நீங்க யாருன்னு சொல்லுங்க. உங்களை சந்திக்காம, பேசாம எப்படி பெரிய பெரிய முடிவுகள் எல்லாம் எடுக்க முடியும்? கல்யாணம் எவ்வளவு பெரிய விஷயம்?''



''நேரில் பார்த்துப் பேசலாம் ராஜி. என்னை உனக்கு நிச்சயமாப் பிடிக்கும்''

''முதல்ல சந்திக்கலாம்''

''ரைட்டு, எப்போ சந்திக்கலாம்?''

''நீங்கதான் சொல்லணும்''

''சாயங்காலம் அஞ்சி மணிக்கு?''

''சரி, எங்க வீட்டுக்கு வர்றீங்களா?''

''உங்கண்ணா இருப்பாரே.''

''அண்ணன் ஊர்ல இல்லை. நான் மட்டும்தான் இருக்கேன், வாங்க''

''வீட்ல வேணாம் ராஜி, மனசு விட்டுப் பேச முடியாது''



''வேற எங்கே பார்க்கறது?''

''டி.நகர்ல பனகல் பார்க் வந்துடு. சரியா அஞ்சு மணிக்கு''

''ரைட்டு, அவசியம் வர்றேன்''

''மை குட்னஸ்! நீ என்னை சந்திக்க ஒப்புக்கிட்டதே எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? என்னோட காதலை நான் வெறும் வாய் வார்த்தையா சொல்லப் போறதில்லை. உன் விரல்ல மோதிரம் போட்டு சொல்றேன். வைர மோதிரம் வாங்கி வர்றேன்.''

''அய்யோ! அதெல்லாம் எதுவும் வேணாம்''

''நோ! நீ மறுக்கக் கூடாது. அஞ்சி மணிக்கு சந்திக்கலாம்''



எதிர்முனையில் போனை வைத்ததும் எனக்குக் கொஞ்ச நேரம் பிரமிப்பாக இருந்தது. ரொம்பவும் உணர்ச்சிவசப் பட்டவன்! பணக்காரன்! வழி வழி என்று வழிகிறவன், யார்?

நான் உடனே பாலாஜிக்கு போன் செய்தேன். வரி வரியாக அப்படி யே சொன்னேன்.

''வெரிகுட்! மாட்டினானா? நாலு மணிக்கு நான் வீட்டுக்கு வர்றேன். பனகல் பார்க்குக்கு சேர்ந்தே போகலாம். நீ மட்டும் இறங்கி உள்ளே போ. நான் மறைவா தள்ளி நின்னுக்கறேன். அவன் வரட்டும். உன் கூடப் பேசட்டும். அதுக்கப்புறம்

வெச்சுக்கறேன். கச்சேரியை என்றார் பாலாஜி.




சொன்னபடி நான்கு மணிக்கெல்லாம் பாலாஜி வந்துவிட்டார். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு நாலரை மணிக்கு நாங்கள் புறப்பட்டோம்.

நாலே முக்காலுக்கெல்லாம் பனகல் பார்க் வந்துவிட்டோம்.

நான் மட்டும் காரை விட்டு இறங்கி உள்ளே சென்று ஒரு சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தேன். சில நிமிடங்கள் இடைவெளி விட்டு பாலாஜி பார்க் உள்ளே வந்து என்னைப் பார்க்க முடிகிற தோதில் ஆனால் மறைவாக ஒரு மரத்தில் பின்னால் நின்று கொண்டார்.

வெளியே வாகனப் போக்குவரத்தின் சத்தங்கள் கலவையாகக் காதுகளில் மோதின.

மணி ஐந்தாகும் போது எனக்குள் ஒரு லேசான படபடப்பு ஏற்பட்டது. எந்த திசையில் இருந்து அவன் வரப் போகிறான்?



நிமிடங்கள் நழுவின. 5.30. அ. 5.45. வ. 6.00. ன். 6.15. வ. 6.30 ர. 6.45. வே. 7.00. யி. 7.15. ல் 7.30. லை.

பொறுமை முற்றிலும் தீர்ந்து போய் பாலாஜி என்னருகில் வந்தார்.

''ரெண்டரை மணி நேரமா பைத்தியங்காரங்க மாதிரி நாம அவனுக்காக காத்திருந்தோம். பாரு. இதுதான் முட்டாள்தனம். இனிமே அவன் வரப்போறானா? வா. போகலாம்'' என்றார்.

நாங்கள் காரில் புறப்பட்டோம்.

''ஏன் அவன் வரல்லை'' என்றேன்.

''வர்ற மாதிரி அவனுக்குப் பிளானே இல்லை ராஜி''

''இது ஒரு மாதிரியான விளையாட்டு. அவன் பேசினதெல்லாம் கப்ஸா. உன்னை அலைக்கழிச்சி அதில் ஒரு த்ரில் அனுபவிக்கிறான் அந்தப் பொறுக்கி.''

''மேற்கொண்டு என்ன செய்யலாம்?''

''இதை அலட்சியப்படுத்தக் கூடாது ராஜி''

''போலீஸ்ல ஒரு கம்ப்ளையண்ட் கொடுத்துடலாமா?

''மூன்லைட் டிடெக்டிவ் ஏஜன்சின்னு ஒண்ணு இருக்கு. அந்த ஆபீசுக்கு கம்ப்யூட்டர் ஸாஃப்ட்வேர் நான்தான் தயார் செஞ்சிக் கொடுத்தேன். மிஸ்டர் பரத் எனக்கு அறிமுகம் இருக்கு. நீ வீட்டுக்குப் போ, நான் ஆபீஸ்லேர்ந்து நேரா உங்க

வீட்டுக்கு வந்துட்டேன். அம்மா பதறிட்டு இருப்பாங்க. நான் எங்க வீட்டுக்குப் போய் சாப்பிட்டு அம்மாகிட்ட சொல்லிட்டு பரத் வீட்டுக்குப் போய் அவரை கன்ஸல்ட் பண்றேன். அவர் என்ன சொல்றார்ன்னு தெரிஞ்சிகிட்டு உன்னை வந்து பார்க்கறேன்'' என்றார் பாலாஜி.

''சரி'' என்று அவரை பஸ் ஸ்டாப்பில் இறக்கி விட்டுட்டு நான் வீட்டிற்கு வந்தேன். மணி 8.05.

யார் அவன்? அந்தக் கேள்வி என்னைக் குடைந்து கொண்டே இருந்தது.

போனில், இரண்டு தடவை அவன் பேசியும் அவன் குரலை வைத்துப் புரியவில்லை. ஆனால் கொஞ்சம் கிராக்குத்தனமாகப் பேசுகிறான்.

கிராக்குத்தனமாக என்றதும் சட்டென்று எனக்கு அண்ணனின் பர்த்டே அன்று என்னை முறைத்து முறைத்துப் பார்த்தவனின் ஞாபகம் வந்தது.

அவன்கூட சில்லித்தனமாக என் சூரிதாரில் இருந்து ஒரு நூலைப் பிய்த்துக் கொண்டு போனானே. 'யூ ஆர் ப்யூட்டிஃபுல்' என்றானே.. இது ஏன் எனக்கு முதலில் நினைவில் வரவில்லை?

ஒருவேளை அவன்தானோ? யோசிக்க, யோசிக்க அவனாக இருக்க சந்தர்ப்பங்கள் அதிகம் இருப்பதாகத் தோன்றியது.

நாளைக்கு அண்ணன் ஊரில் இருந்து



வந்ததும் சொல்லி அவன் யார் என்று விசாரிக்க வேண்டும்.

நான் டி.வி.யில் மெட்ரோ சேனல் போட்டுக் கொண்டு சோபாவில் அமர்ந்தேன்.




சரியாக ஒன்பது மணி பத்து நிமிடங்களுக்கு..

நான்....

இறந்து..

போனேன்!




மாப்பிள்ளையும், பெண்ணும் ஆப்பிள் செருகின பூச்செண்டை கையில் பிடித்துக் கொண்டு ஒவ்வொருவர் வரும்போதும்

வீடியோவுக்குச் சிரித்து, ''இவர் இன்னார்'' என்று நான்காவது நிமிடம் மறந்து போய்விடப் போகிற தகவல்களைச் சொல்லி அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தனர். உட்காரலாமா என்று யோசிக்கும் போதெல்லாம் ஒரு புது அழைப்பாளி சந்தனம் தொட்டுக் கொண்டு, பூக்காகிதம் சுற்றின பார்சலோடு, வீடியோ வெளிச்ச எல்லைக்குள் நுழைந்து உட்காரவிடாமல் செய்து கொண்டிருந்தான்.

மேடையில் மெல்லிசைக் குழு தங்கள் வெல்வெட் துணி பேனரை பின்புறம் கட்டிக் கொண்டு, இரண்டு கீ போர்டுகளில் சகல சத்தங்களையும் கொண்டு வந்து இரைச்சலாக யாருக்காகப் பாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

நாற்காலிகளில் அமர்ந்திருந்தவர் எல்லோரும் மாறி மாறி யாரையாவது பிடித்துக் கொண்டு வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பரத் அந்த இரைச்சல் எல்லை விளிம்பில் நின்று கொண்டு சிகரெட் ஊதி காத்திருந்தான். தூரத்தில் சுசீலா தன் போனி டெய்ல் அசைய ஏதோ தகராறு தீர்த்து வைப்பவள் போல நான்கைந்து தோழிகளுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

பீடா முடித்து, புகைத்துக் கொண்டிருந்த இவனிடம் ஒரு ஜிப்பாக்காரர் வந்து, ''இதுதான் கடைசி பந்தி. சாப்புடலைன்னா



சாப்பிட்டுடுங்கோ'' என்றார்.

''இனிமே நாளைக்கு காலைலதான்'' என்றான்.

சட்டையில் படிந்திருந்த ஒரு துளி சந்தனத் துணுக்கை சுரண்டிக் கொண்டு, சிகரெட்டின் ஃபில்டர்முனை வரை இழுத்துவிட்டு விசிறிய போது, சுசிலா ஒரு பட்டுச் சேலை பெண்ணுடன் வந்தாள்.

''பரத், நான் சொல்லியிருக்கேனில்லை, இவதான் சுஜா, என் காலேஜ்மேட், ஸ்போர்ட்ஸ்ல ஒரு கப் விடாம அத்தனையும் இவளே கொள்ளையடிசிடுவா''

சுசிலா அவளைப் பற்றி சொன்னதாக நினைவில்லை என்றாலும் அந்தப் பெண்ணிற்கு ஒரு புன்னகையும், ஹலோவும் விநியோகித்தான். அபாயகரமான புடவைக் கட்டல். முன்னந்தலை ஃபேஷன் என்ற பெயரில் குதறல். முகத்தில் இருந்து டால்கம் மூக்கை நலம் விசாரித்தது.

''உங்களோட சாகஸங்களைப் பத்தி கதை கதையா சொல்வா'' என்றாள் சுஜா மூக்குத்தி மிளிர.

''ஸ்போர்ட்ஸ் ஸ்டார்ல ஒரு தடவை அட்டையில வந்தீங்களோ?''

''அய்யோ! அந்த அளவுக்கு இன்னும் வரலை சார்.''

அப்புறம் மூன்று பேரும் எல்லா வார்த்தைகளையும் பதுக்கி வைத்துக்

கொண்டு கொஞ்ச நேரம் நிற்க...

''கடைசி பந்தி நடக்குதாம். சொல்லிட்டு போனாங்க. சாப்புடலைன்னா போய் சாப்பிட்டுடுங்க'' என்றான் பரத்.

''வர்றேன். அப்புறம் பார்க்கலாம்'' என்று போனாள்.

''போவமா?'' என்று பரத் ஹிப் பாக்கெட்டிலிருந்து கார் சாவியை எடுத்துக் கொண்டான்.

''இருங்க பரத், பானுமதிகிட்ட சொல்லிட்டு வந்துடறேன்''

''உதை வாங்குவே நீ. சொல்லிட்டு வந்துடறேன்னு போய்தான் என்னை ஒரு மணி நேரமா நிக்க வச்சே. இப்படியே நழுவிடலாம் வா''



''ஹேண்ட் பேக் கொடுக்கறா பரத்.''

''ச்சீ! அல்பம்! வா'' அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு கல்யாண மண்டபத்தின் வாசலுக்கு நடந்தான் பரத்.

''இது முறையே இல்லை'' என்று சுசிலா தன் வெள்ளை பனியனின் பின்பகுதியை பேண்ட்டிற்குள் சரியாக இன் செய்தபடி காருக்கு நடந்து வந்து முன்புறம் அமர்ந்து கொண்டாள். பனியனில் கறுப்பு எழுத்துக்கள்.

"2 X 2 = HEAVEN"

பரத் ஸ்டார்ட் செய்து, ''கல்யாணம், வரவேற்பு இதெல்லாம் போர் சுசி, பர்த்டே பார்ட்டி, ஹோட்டல் கெட்-டு-கேதர் இதெல்லாம்தான் சுவாரசியம்'' என்றான்.

''ஏனாம்?''

''பட்டுப் புடவையில் பார்க்கிறப்ப சிரமமா இருக்கு''

''லட்சம் பட்டுப் பூச்சிகளோட உயிர் ஞாபகம் வருதாக்கும்''

''சேச்சே! சரியான டைமன்ஷன் புரியலை. ப்ரொஃபைலுக்காக தவமிருக்க வேண்டியிருக்கு.''

''புத்தி போறதைப் பாரு!''

''உன்னை மாதிரி வக்கிரப் புத்தி எனக்கில்லை. ட்டு இண்டு டூ ஈஸ் ஈக்வல் டூ ஹெவன்னு ஒரு புது வாய்ப்பாடு எழுதி வெச்சிருக்கியே, என்ன அர்த்தம்? ஹெவன்னா சொர்க்கம். புரியுது. எந்த ரெண்டை எந்த ரெண்டால பெருக்கணும்? ஒரு ரெண்டுக்கு அர்த்தம் புரியுது. இன்னொரு...''



''வில் யூ ஸ்டாப் இட்?''

''ரைட், நீ இன்ட்ரட்யூஸ் பண்ணியே, சுஜா அவளோட நீ தூரத்தில நின்னு பேசிட்டிருந்தப்பவே பார்த்தேன். கவலையா இருந்துச்சி''

''என்ன கவலை?''

''நிறம் இருந்து என்ன? உயரம் இருந்து என்ன? குழைவா இடுப்பு இருந்து என்ன? எதிரியை எச்சில் விழுங்க வெக்கிற மாதிரி பெருமூச்சு விடமுடியாதபடி பொண்ணா இருக்காளேன்னு நினைச்சேன். நீ

இண்ட்ரட்யூஸ் பண்ணி வச்சப்பத்தான் காரணம் புரிஞ்சது''

''ஒண்ணும் புரியலை''

''ஸ்போர்ட்ஸ் கேர்ள்னு சொல்லலை? ஸ்போர்ட்ஸ் கேர்ள்னா அப்படித்தான்''

சற்று தாமதமாக புரிந்து கொண்ட சுசிலா அவன் வயிற்றில் லேசாகக் குத்தி, ''பரத், உங்க மூளையில ஒரே சேனல்தானா? 'எஸ்' சேனல்!''

''செக்ஸ் சேனல்!''

''அது எவ்வளவு பெரிய முக்கியமான விஷயம் நினைச்சிருந்தா மிஸ்டர் வள்ளுவர் ஒரு மில்க் ஒதுக்கியிருப்பார் அதுக்கு? அது இல்லை என்றால் நீ இல்லை. நான் இல்லை. இந்த கேள்வியே இல்லை.''



''மணி என்ன? நியூட்டன் எத்தனை மணிக்கு போன் செய்யச் சொன்னார்?''

''கடமை மறந்துடமாட்டேன் சுசி. மணி எட்டரை ஆகுது. வீட்டுக்கு போனதும் அவருக்கு போன் செஞ்சிட்டு அப்புறம் உன்னை ஹாஸ்டல்ல ட்ராப் பண்றேன்.''

''பரத், நானும் ஆறு மாசமா கேட்டுக்கிட்டிருக்கேன்'' என்றாள் சுசி.

''நீ எப்படிக் கேட்டாலும் பிரயோஜனமில்லை. இந்த ஜென்மத்துல நமக்கு கல்யாணம் கிடையாதுன்னு எல்லோரும் தீர்மானிச்சுட்டாங்க''

''கல்யாணமா? நான் கேட்டது கார்!''

''இப்ப ஓட்டிக்கிட்டிருக்கிறதுக்குப் பேர் என்ன. சைக்கிளா?''

''எனக்கே எனக்குன்னு தனிப்பட்ட முறையில ஒரு மாருதி வேணும் பரத்''

''இதுவும் உன்னோட கார்தானே சுசி?''

''எல்லா நேரமும் என்கிட்டே இருக்கா? ஒரு அவசரத்துக்கு கிடைக்குதா?''

''அவசரத்துக்குத்தான் கைனடிக் ஹோண்டா வெச்சிருக்கியே..''

''ஒரு 'எம்.டி.ஏ.'வோட ஸ்டார் டிடெக்டிவ் ஸ்கூட்டர்ல போறது நம்ம ஆஃபீஸ் இமேஜுக்கு சரியா இருக்கா?''

''சரி, நாளையிலேர்ந்து வாங்க ஆரம்பிச்சிடலாம்''.

''நான் ஒரே ஒரு மாருதிதான் கேட்டேன். அதை தவணை முறையில யாரும் விக்கறதில்லை - டயர் தனியா, ஸ்டியரிங் தனியா...''



''மாருதி மொத்தமா வாங்கறதுக்குதான் வ்ாங்க ஆரம்பிச்சிடலாம்னு சொன்னேன்''

''என்ன வாங்கறது?''

''லாட்டரிச் சீட்டுதான்''

''யூ.. யூ...யூ..'' என்று சுசிலா கோபமாகக் கையை ஓங்க, கார் பரத் வீட்டின் வாசலில் திரும்பி நிற்க... அதன் ஹெட் லைட்ஸ் வெளிச்சத்தில் கண்கள் கூசத் திரும்பிப் பார்த்த பாலாஜி வாசல்படியில் இருந்து எழுந்து கொண்டான்.

''ஸம்படி ஈஸ் வெயிட்டிங்'' பரத் காரை

நிறுத்திவிட்டு இறங்கி அருகில் வந்து, ''ஹலோ! உங்களை ஞாபகமிருக்கு. இருங்க. சொல்லாதீங்க. எங்க ஆபிஸ் கம்ப்யூட்டருக்கு ஸாஃப்ட் வேர் நீங்கதான் ரெடி பண்ணிக் கொடுத்தீங்க. மிஸ்டர் ஏதோ ஒரு ஜி! ரைட்?'' என்று கையை குலுக்கினான் பரத்.

''பாலாஜி! என்றான் பாலாஜி.

சுசிலா சாவி போட்டுத் திறந்து உள்ளே விளக்குகள் போட்டாள்.

''வாங்க, ரொம்ப நேரமா வெய்ட் பண்றிங்களா? வீட்ல ஒரு வேலைக்காரன் இருக்கான். ஊருக்குப் போயிருக்கான். நாங்க ஒரு கல்யாண ரிசப்ஷனுக்குப் போய்ட்டு.. உக்காருங்க. நோ மில்க். ஸோ நோ ஹாட், ராத்திரியானாலம் ரஸ்னா'' என்றான் பரத்.



பாலாஜி ஸோபாவில் அமர்ந்தான். ''நான் வந்து பத்து நிமிஷம்தான் ஆச்சி. ஒரு கால் மணி நேரம் வெய்ட் பண்ணிப் பார்க்கலாம்னு நினைச்சேன்''

சுசிலா ரெஃப்ரிஜிரேட்டரில் இருந்து எடுத்து மூன்று பேருக்குமாக கிளாஸ்களில் ஊற்றி, தண்ணீர் கலந்து, ஐஸ் கண் சதுரங்களை மிதக்க விட்டு எடுத்து வந்தாள். பரத் டீப்பாய் அடியிலிருந்து ஆஷ்டிரே எடுத்து மேலே வைத்துவிட்டு, அவனுக்கு ஆஃபர் செய்து மறுக்கப்பட்டதும் பற்ற வைத்துக்

கொண்டான்.

''என்ன சொல்லுங்க''

''ஒரு சின்ன கன்ஸல்ட். உங்க அட்வைஸ் வேணும்''

''என்ன?''

''சுந்தர்னு சிவில் என்ஜினியர் அவரோட சிஸ்டர் ராஜி. நாங்க ரெண்டு பேரும்.. வந்து..'' சிரிப்போடு தயங்கினான்.

''காதல் பண்றீங்க. மேல?''

''எங்க வீட்லயும் சரின்னுட்டாங்க அவங்க அண்ணனும் சம்மதிச்சுட்டார். கல்யாணத்துக்கு தேதி ஃபிக்ஸ் பண்ணப் போறோம்''

''நியாயம்தான். எல்லோருமே எங்களை மாதிரி நெவர் என்டிங்கா லவ் பண்ணிட்டு இருப்பாங்களா? ஒரு ஸ்டேஜ்ல ஏண்டா லவ் பண்ணோம்னு ஃபீல் பண்றதுக்காக கல்யாண தண்டனையை அடைஞ்சுதான் தீரணும். ஜஸ்ட் ஃபார் ஃபன். சொல்லுங்க''



''இந்த சூழ்நிலையில யாரோ ஒரு பணக்கார பொறுக்கி தன்னை அடையாளப் படுத்திக்காம ராஜிக்கு போன்ல பேசறான். என்னைப் பத்தி தப்பா சொல்றான். தன்னை கல்யாணம் செய்துக்கச் சொல்றான். கொஞ்சம் கிராக் மாதிரி பேசறான். இன்னைக்கு ஈவினிங் அவளை அஞ்சி மணிக்கு பனகல் பார்க்குக்கு வரச் சொன்னான். ராஜியை அவனுக்காக காத்துக்கிட்டிருந்துட்டு நான் மறைவா

நின்னு வெய்ட் செய்தேன். ஏழரை வரைக்கும் அவன் வரவே இல்லை. மேற்கொண்டு என்ன செய்யறதுன்னு புரியலை. ஒரு குழப்பமா இருக்கு''.

சாம்பலைத் தட்டின பரத், ''இது வரைக்கும் எத்தனை தடவை போன் செஞ்சிருக்கான் அவன்?''

''ரெண்டு தடவை''

''நீங்க பக்கத்தில இருந்திங்களா?''

''இல்லை ராஜி சொன்னதுதான். ஆனா ராஜி விவரமா ஒரு வார்த்தை விடாம அவன் என்ன பேசினான்னு என்கிட்ட சொல்லிருக்கா.''

''நீங்களும் எக்ஸாக்ட் உரையாடல்களை அப்படியே உங்களுக்குத் தெரிஞ்ச வரைக்கும் சொல்லுங்க. முதல் தடவைப் பேசினப்ப எப்படி ஆரம்பிச்சான்? ரெண்டாவது தடவை என்ன பேசினான்? நிதானமா யோசிச்சு சொல்லுங்க... சுசி!''



சுசிலா கப்போர்டில் இருந்த டேப்ரிக்கார்டரைக் கொண்டு வந்து டீப்பாய் மேல் வைத்து ரெக்கார்ட் செய்யத் துவங்கினாள்.

பத்து நிமிடங்கள் விரிவாகச் சொன்னான் பாலாஜி.

''கொஞ்சம் நட் கழண்டவனாகத்தான் தெரியுது'' என்றாள் சுசிலா.

''சொன்னபடி ஏன் பனகல் பார்க் வரலை?'' என்றான் பரத்.

''சிம்பிள் பரத். அவன் வந்தான். ஆனா கிட்டே வந்து ராஜியை சந்திக்கலை''

''ஏன்?''

''ராஜியோட இவர் ரகசியமா வந்திருக்கிறதை அவன் பார்த்திருக்கலாம். ராஜியை அவன் தனிமையில எதிர் பார்த்திருப்பான். அவ துணையோட, ஏற்பாட்டோட வந்ததைப் பார்த்ததும் நைஸாப் பதுங்கிட்டான்''

''அப்படின்னா அவனோட அடுத்த மூவ் என்னவா இருக்கும்?''

''நிச்சயமா மறுபடி போன் செஞ்சி ராஜியைத் திட்டுவான். 'நான் யார்கூட பழகாதேன்னு சொல்றேனோ அவனையே துணையா அழைச்சுட்டு வந்தியே, உனக்கு எவ்வளவு திமிர்' அப்படின்னு நானா இருந்தா டயலாக் பேசுவேன். இதே அர்த்தத்தில அவன் வேற வார்த்தைகள்ல பேசலாம்.



'ஆக போன் பேசுவான்'

'ஷ்யூர்'

''அப்போ, வங்க புறப்படலாம்'' என்று எழுந்து கொண்டான் பரத்.

''எங்கே?''

''ராஜி வீட்டுக்குப் போலாம். அவன் இதுவரைக்கும் போன் செய்யாம இருந்திருந்தா நல்லது. எந்த நேரமும் செய்யலாம். ராஜி வீட்டு டெலிபோன்ல டேப் ரெக்கார்டர் இணைக்கலாம்.

எக்ஸ்சேஞ்ச்ல நான் சொல்லி வைக்கிறேன். ராஜி வீட்டு நம்பர் என்ன?'' என்று ரிசிவரை எடுத்தான் பரத்.

சுசிலா டெலிவிஷன் போட்டாள். ''தண்ணீர் தட்டுப்பாட்டை சரி செய்வதற்கு போர்கால நடவடிக்கைகள் எடுத்து பொதுமக்களின் குறைகளை சரி செய்து வருவதாக நிருபர்களிடம் தமிழக முதல்வர் செல்வி. ஜெயலலிதா தெரிவித்தார்'' என்று சந்தியா செய்தி சொல்லிக் கொண்டிருந்தார்.

பரத், ராஜியின் எண்களை சுற்றி விட்டுக் காத்திருந்தான்.

சுசிலா செகண்ட் சானல் மாற்றினாள்.

மெட்ரோ சேனலில் நடிகவேள் குமாரர் ராதாரவி ஒரு நடிகையை பேட்டி கண்டு கொண்டிருந்தார். ''நீங்க கல்யாணம் ஆனதுக்கப்புறம் கதாநாயகியா நடிச்சிட்டிருக்கீங்க. கல்யாணத்துக்கு முன்னாடி கதாநாயகியா நடிச்சதுக்கும், இப்ப நடிக்கறதுக்கும் ஏதாவது வித்தியாசமா ஃபீல் பண்றீங்களா?'' பரத் சைகை காட்ட சுசிலா அணைத்துவிட்டாள்.

எதிர்முனையில் ரிசீவர் எடுக்கப்பட்டு, ''ஹலோ ராஜி ஹியர்'' என்று அவளின் குரலைவிட பின்னணியில் மேற்கத்திய சங்கீதம் பிரதானமாகக் கேட்டது.

''நான் மூன்லைட் பரத், மிஸ்டர் பாலாஜி இங்கேதான் இருக்கார். அவர் எல்லா



விபரமும் சொன்னார்''

''எக்ஸ்யூஸ்மீ, ஒன் மினிட்'' என்றாள். காத்திருந்தான். மேற்கத்திய சங்கீதத்தின் வால்யூம் வெகுவாகக் குறைந்தது. ''இப்பச் சொல்லுங்க''.

மறுபடி சொல்லி, ''நாங்க உங்க வீட்டுக்குதான் வந்துக்கிட்டிருக்கோம். அவன் மறுபடி போன் செஞ்சானான்னு கேட்டுக்கத்தான் போன் செஞ்சேன்''

''இல்லை சார், போன் செய்யலை இதுவரைக்கும்''

''பேசினா கொஞ்சம் அதிக நேரம் பேசுங்க. மிச்சத்தை நேர்ல பேசிக்கலாம்'' என்று வைத்துவிட்டு டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் தனக்குத் தெரிந்த ஜே.ஈ.க்கு போன் செய்து விபரம் சொல்லி நம்பர் சொல்லி வைத்தான். ''போலாம்'' என்றான்.

வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தார்கள்.

''நீங்க எதில வந்தீங்க பாலாஜி?''

''ஆட்டோல. எனக்கு டூ வீலர் ஓட்டறதுக்கு பயம். அதனால வாங்காம இருக்கேன். கொஞ்சம் வசதியானதும் கார்தான் வாங்கணும். அப்பவும் நான் ஓட்ட மாட்டேன். டிரைவர் போட்டுக்குவேன்.''

''டிராஃபிக் ஃபோபியா! ஏறுங்க'' என்றான் பரத்.

அவர்கள் ராஜியின் வீட்டு வாசலில்

காரை நிறுத்தி இறங்கின போது 9 மணியும் 11 நிமிடங்களும் ஆகியிருந்தன.



# 8

அழைப்பு மணி அழுத்த அவசியமில்லாமல் வாசல் கதவு திறந்தே இருக்க, ஆனாலும் ஒரு மரியாதைக்காக மணியழுத்திவிட்டுக் காத்திருக்க, பாலாஜி உரிமையோடு "வாங்க சார்" என்று வீட்டு உள்ளே நுழைந்தபடி "ராஜி" என்றான்.



ராஜி ஹாலில் தரையில் கவிழ்ந்து கிடந்தாள். மொசைக் தரையில் ரத்தம்! ரத்தம்! ரத்தம்! ரத்தம்!

"ராஜீ!" உயர்ந்த டெஸிபல்களில் அலறினான்.

உள்ளே கால் வைத்ததும் பார்த்த அந்த காட்சி பரத், சுசிலாவையும் படாரென்று தாக்கியது.

மைகாட்! என்ன கோரம் இது! சற்றுமுன் தொலைபேசியில் பேசியவள்! எனில்.. இப்போதுதான்.. சற்று முன்தான்... இந்த சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

சற்றுத் தள்ளி உயிரைப் பருகின முக்காலடி நீள கத்தி கிடந்தது.

"சார்! என்ன சார் இது? என்ன கண்றாவி இது? ராஜி! ராஜி!" அரற்றியபடி அவன் அருகில் அமர்ந்து முகத்தைத் திருப்பிப் பார்த்தான் பாலாஜி.

"ப்ளீஸ்.. டச் பண்ண வேணாம். இந்தப் பக்கம் வந்துடுங்க. சுசி, இந்த போன் வேணாம். பக்கத்தில் விசாரிச்சு வேற போன்ல போலீசுக்கு முதல்ல் தகவல் கொடுத்துட்டு வந்துடு" என்ற பரத் பாலாஜியின் தோளைத் தொட்டு எழுப்பினான். "உயிர் இல்லைங்க பாலாஜி. அதிர்ச்சிதான், கோரம்தான், ப்ளீஸ்.. கண்ட்ரோல் யுவர் செல்ஃப், இப்படி வாங்க."



அவனை அழைத்து வந்து ஹாலுக்கு வெளியே ரிசப்ஷன் பகுதியில், ஒரு மூங்கில் நாற்காலியில் உட்கார வைப்பதே ஒரு போராட்டமாக இருந்தது.

பாலாஜி கேவிக்கேவி அழத் துவங்கியிருந்தான்.

சுசிலா வெளியில் சென்றிருக்க.... பரத் முதலில் வீட்டின் வாசல் போர்டிகோவில் பார்த்தான். ஒரு அம்பாசிடர், ஒரு மொபட் வாசல் கதவருகில் ஒரே ஒரு ஜோடி லேடீஸ் செருப்புகள் கழற்றி விடப்பட்டிருந்தன. பரத், சுசிலா, பாலாஜி மூவருமே ஷூ அணிந்திருந்தோம். அது ராஜியுடையதாகத்தான் இருக்க

வேண்டும்.

உள்ளே பாலாஜியைத் தாண்டி ஹாலுக்குள் வந்து கைகளைக் கட்டிக் கொண்டு அமைதியாகப் பார்த்தான்.

சதுரமான ஹால் அது. மூன்று சுவர்களில் மூன்று வாசல்கள். ஒன்று ரிசப்ஷனிலிருந்து உள்ளே வரும் வழி. ஒன்று கிச்சனுக்கு. ஒன்று ஒரு படுக்கையறைக்கு. நான்காவது சுவரில் எட்டடிக்கு நான்கடி ஜன்னல், பெல்மெட் அமைத்து நைஸான திரைச்சீலைகள் இரண்டு பக்கங்களிலும்.

இருவர் அமர்கிற ஒரு சோபா செட். அதன் அருகில் ஒன்றை ஒன்று பார்த்தபடி இரண்டு சிங்கிள் சீட்டர் ஸோபா செட். நடுவில் ஓவல் சைஸில் ஒரு டீப்பாய். சோபாவில் இருந்து பார்க்கும் தோதில் நேரெதிரில் சக்கரங்கள் பொருத்தின மரத்தால் ஆன ஒரு டி.வி. ஸ்டாண்ட், அதில் டிவிக்கு தனி கப்போர்டு. கீழே வி.சி.ஆருக்கு தனிக் கப்போர்டு. அதற்கும் கீழே வீடியோ கேசட்டுகள் வைக்க ஒரு டிராயர். டி.வி. மூடியிருந்தது - உள்ளே இருப்பது தெரியாதபடி.

டி.வி. ஸ்டாண்ட் அருகில் இரண்டரை அடி உயரத்தில் ஒரு நான்கடி மேஜை. மேஜை மேல் ஒரு அழகான பூச்சாடியும், தண்ணீர் ஜக்கும், டெலிபோனும்.

மொசைக்தரை. சோபா செட் அருகில் நிறைய ரத்தம் இருந்தது. ஆனால் ராஜி விழுந்து கிடந்தது டி.வி. ஸ்டாண்டுக்கும், மேஜைக்கும் நடுவில், அங்கும் ரத்தம்! நடுவில் பத்தடிக்கு மேற்பட்ட தூரம் வழியெல்லாம் ரத்தம் தேய்க்கப் பட்டிருந்தது.

பார்த்ததுமே ஒரு உண்மை உடனே புலப்பட்டது. ராஜி சோபா செட் அருகில் கத்தியால் குத்தப்பட்டிருக்கிறாள். குத்தப் பட்டதும் உடனே இறக்கவில்லை. மேஜையை நோக்கித் தன் உடம்பைத் தேய்த்துக் கொண்டு நகர்ந்து வந்திருக்கலாம்.

மேஜை மேல் டெலிபோன் இருப்பதால் டெலிபோன் செய்ய கடைசி விநாடிகளில் துடித்திருக்கலாம். ஆனால் அதற்குள் மரணம் அவளை அணைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

எட்டரை மணிக்கு போனில் பேசினாள். மணி இப்போது ஒன்பதே கால்... அதற்குள்... அதற்குள்... அந்த கிராக்குப் பிடித்த ஆசாமி வந்து குத்திவிட்டுப் போயிருக்கிறான். ராஸ்க்கல்! மூன்று குத்துக்கள்! மார்பில்! வயிற்றில்! வயிற்றில்!

காதலில் வெற்றி பெற்று கல்யாணம் செய்துக் கொள்ளப் போகிற சந்தோஷத்தில் மிதந்த இளமையான, அழகான பெண்! திடுதிப்பென்று சீரழித்து விட்டுப்

போய்விட்டான்.

சுசிலா திரும்பி வந்தாள். "பரத், போன் பேசிட்டேன். எதிர்த்த வீட்ல மிஸ்டர் சடகோபன்னு டாக்டர். சாப்பிட்டுக்கிட்டு இருக்கார். இந்த ஃபேமிலியை நல்லாத் தெரியுமாம். இன்ஃபாக்ட் கொஞ்சம் முன்னாடி ராஜியோட அண்ணனைப் பார்த்து பேசறதுக்காக வந்தாராம். ரெண்டு, மூணு தடவை பெல் அடிச்சும் பதில் இல்லாததால திரும்பிப் போய்ட்டாராம். கை கழுவிட்டு வர்றேன்னார். ஏரியா ஸ்டேஷனுக்கே சொல்லிட்டேன்".

பரத், பாலாஜி அருகில் அமர்ந்தான். தண்ணீர் கொண்டு வரச் சொல்லி அவனுக்குக் கொடுத்தான். "கொஞ்சம் தெம்பா இருங்க".



"எப்படி சார் முடியும்? அந்தப் படுபாவி இவ்வளவு தூரம் செல்வான்னு தெரிஞ்சிருந்தா நான் ராஜியை தனியா அனுப்பி வெச்சிருக்க மாட்டேன்..."

"நடக்கக் கூடாதது, நடந்திடுச்சி. இனிமே என்ன செய்ய முடியும்? இது மகா கொடுமைதான்" என்றாள் சுசிலா.

சில நிமிடங்களில் டாக்டர் சடகோபன் கைலியும், பனியனும், மேல் துண்டுமாய் வந்து தன்னை பரத்திடம் அறிமுகப் படுத்திக் கொண்டு, உள்ளே எட்டிப் பார்த்து, "இப்பத்தான் நடந்திருக்கு போலிருக்கு. ச்ச்! ச்ச்! ரொம்ப நல்லப் பொண்ணு. என்ன பிரச்னை? யாரு? என்றார்.

"தெரியலை."

"நீங்க எப்போ வந்து பெல் அடிச்சிப் பார்த்தீங்க?"

"நான் இதே ஏரியாவில ஒன்றரை கிரவுண்ட் லேண்ட் வாங்கியிருக்கேன். அதுல வீடு கட்டறதுக்காக சுந்தர் சார்கிட்ட பிளான் போடக் கொடுத்து ஒரு வாரமாச்சு. எதுவும் போட்டு வெச்சிருக்காரான்னு விசாரிக்கலாம்னு டி.வி.ல நியூஸ் பார்த்து முடிச்சுட்டு வந்தேன். மூணு தடவை பெல் அடிச்சேன். உள்ளே வெஸ்டர்ன் மியூசிக் அலறிக்கிட்டிருந்திச்சி. ஆனா யாரும் வந்து கதவைத் திறக்கலை."



"வாசல் கதவு நல்லா மூடித்தான் இருந்திச்சா?"

"ஆமாம். மூடிதான் இருந்திச்சி. மூணு தடவை அடிச்சும் பதில் இல்லைன்னதும் ஒருவேளை மியூசிக்கைப் போட்டு விட்டுட்டு குளிக்கப் போய்ட்டாங்க போலிருக்குன்னு நினைச்சி நான் திரும்பப் போய்ட்டேன்"

"வாசல்ல ஒரு அம்பாசிடரும், மொபட்டும் நிக்குதே. யாருதுங்க பாலாஜி?" என்றார் பரத்.

சடகோபன் சொன்னார். "இவங்க வண்டிதான். ராஜி மொபட் யூஸ் பண்ணும். எப்பவாவது கார் எடுக்கும்.

என்ஜினியர் முழுக்க கார்தான் யூஸ் பண்ணுவார்.''

''நீங்க வந்தப்ப வாசல்ல இந்த ரெண்டு வண்டி தவிர வேறு ஏதாவது வண்டி நின்னுட்டிருந்திச்சா?''

''இல்லையே...''

''உள்ளே ஏதாச்சும் பேச்சுக்குரல் கேட்டுச்சா?''

''இல்லை சார்?''

''நீங்க வர்றதுக்கு முன்னாடி ஏதாச்சும் அலறல் சத்தம்?''

''கேக்கலைங்க.''

வீட்டு வாசலில் போலீஸ் ஜீப் வந்து நின்று, இன்ஸ்பெக்டர் சைமன்ராஜ் இறங்கி வந்தார். பரத் தன்னுடைய விசிட்டிங் கார்டைக் கொடுத்து அறிமுகப்படுத்திக் கொண்டு, பாலாஜியை அறிமுகப்படுத்தி, தான் எப்படி, ஏன் இங்கே வந்தேன் என்று விபரம் சொன்னான்.



ராஜி போனில் மிரட்டப்பட்டதும், எல்லா பின்னணி தகவல்களையும் கோர்வையாகச் சொல்லி முடித்தான் - எதிர்வீட்டு டாக்டரின் ஸ்டேட்மெண்ட் வரை.

இரண்டு, மூன்று நரை முடிகள் மீசையில் கலந்திருந்த இன்ஸ்பெக்டர் சைமன்ராஜ் கொலை நடந்த ஹாலுக்குள் சென்று பார்த்தார்.

''குற்றம் இப்ப கொஞ்சம் முன்னாடிதான் நடந்திருக்கிறதால உடனடியா நாய் வரவழைச்சா உதவியா இருக்கும்னு நினைக்கிறேன்''

உள்ளே இருந்த டெலிபோன் ரீசிவரையே கர்சீப் போட்டு எடுத்து நாய்க்கு சொல்லி வைத்தார்.

''இந்தப் பொண்ணோட அண்ணன் திருச்சில எங்கே இருப்பார்னு தெரியுமா? தகவல் சொல்லணுமே''

''இன்னைக்கு ராத்திரி ராக்போர்ட்ல புறப்பட்டு நாளைக்குக் காலைல மெட்ராஸ் வந்துடுவார்னு ராஜி சொன்னா'' என்றான் பாலாஜி.

சைமன்ராஜ் வரிசையாக சில போன்கள் செய்துவிட்டு வெளியே வந்து, கான்ஸ்டபிள்களை அழைத்து, ''பக்கத்துப் பக்கத்து வீட்ல இருக்கிறங்களை கூட்டிட்டு வாங்கய்யா'' என்றுவிட்டு பாலாஜி பக்கம் திரும்பி, ''போன்ல மிரட்டின அந்த ஆசாமியை அந்தப் பொண்ணால யூகம் செய்ய முடியலையா?''



''முடியலையே...''

''ஏற்கனவே ஒரு தடவை சந்திச்சிருக்கோம்னு அவன் முதல் தடவை போன்ல சொல்லியிருக்கானே...''

''ராஜி யோசிச்சுப் பார்த்தும் புரியலை. தெரிஞ்சிருந்தா நேரா அவன் பேர்ல புகார் எழுதிகிட்டு உங்ககிட்ட வந்திருப்போமே...''

சைமன்ராஜ் மேலும் கேள்விகள் கேட்டுத் தெளிவுப்படுத்திக் கொண்டார். வாசலில் கான்ஸ்டபிள்கள் அழைத்து வந்த ஏழெட்டு பேரை அதிகார தொனியில் விசாரிக்க துவங்கினார்.

அந்த வீட்டிற்கு யாரும் வந்ததையோ, போனதையோ யாரும் பார்க்கவில்லை என்றார்கள். அலறல் சத்தத்தை யாரும் கேட்கவில்லை என்றார்கள். ஏட்டு ஒருவர் மெனக்கெட்டு எழுதிக் கொண்டிருந்தார்.




தெருமுனை கடையிலிருந்து எல்லோருக்கும் டீ வந்தது. போட்டோகிராபர் புகைப்படங்கள் எடுத்துவிட்டு சென்றார். நாய் வந்து தெருமுனை வரைக்கும் புயல்போல ஓடி படுத்துவிட்டது. எஸ்பி. வந்து பார்த்துவிட்டு இன்ஸ்பெக் டரிடம் விபரங்கள் தெரிந்து கொண்டு, 'பரவால்லை, சில கேஸ்ல மோடிவும் புரியாது. ஒரு எழவும் புரியாது. யு ஹேவ் எ ஸ்டார்ட்! அவனை கப்புன்னு புடுச்சிடுங்க'' என்றுவிட்டுப் புறப்பட்டுச் சென்றார். பாடியை ஜி.ஹெச். அனுப்பி



வைக்க தகவல் சொல்லி ஆம்புலன்சுக் காகக் காத்திருந்த வேளையில்-

இன்ஸ்பெக்டர் சைமன்ராஜ் பரத்தின் சிகரெட் பாக்கெட்டைக் கேட்டு உரிமையோடு ஒன்றெடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு ''இப்படி வாங்க'' என்று வீட்டுக்கு வெளியே சாலையில் கொஞ்ச நேரம் அழைத்துச் சென்றார்.

''என்ன மிஸ்டர் பரத், என்ன நினைக்கறீங்க?''

''ரொம்ப ஆரம்பத்தில இருக்கோம் சார்.''

''அந்த பணக்கார கிராக்தான் வந்து குத்திட்டுப் போயிருப்பானா?''

''கொய்ட் பாஸிபிள்!''

''பாலாஜி எப்படிப்பட்டவர்?''

''எனக்கு நல்ல அறிமுகம்தானே ஒழிய, அவருக்கு மோடிவ் எதுவும் இல்லை. லவ் பண்ணின பொண்ணு சார். கல்யாணம் செய்துக்க இருந்தார். கொலை நடந்தப்ப அவர் எங்களோட இருந்தார். நான்தான் ராஜியோட போன்ல பேசிட்டு புறப்பட்டேன்னு சொல்றேனே...''

''அவன் யாருன்னு அந்தப் பொண்ணுக்கே தெரியலை. எந்த ரூட்ல போய் தேட ஆரம்பிக்கிறது? சிக்கல்!''

''எனக்கு ஒரே ஒரு விஷயம் புரியலை சார்'' என்றான் பரத்.

''என்ன?''

''எதிர்த்த வீட்டு டாக்டர் மூணு தடவை

பெல் அடிச்சுப் பார்த்துட்டு போய்ட்டதா சொன்னார். அப்போ வெஸ்டர்ன் மியூசிக் கேட்டுவிட்டு இருந்திச்சுன்னு சொன்னார்.''

''சரி''.

''நான் போன்ல பேசினப்பவும் பின்னணியில வெஸ்டர்ன் மியூசிக் கேட்டது. அந்தப் பொண்ணு சவுண்டை குறைச்சு வெச்சுட்டு என்கிட்ட பேசிச்சி''

''அதனால என்ன பரத்?''.

''நான் வந்ததுமே அப்சர்வ் பண்ணிட்டேன். அந்த ஹால்லயும் சரி, பக்கத்தில இருக்கிற ரூம்லயும் சரி. டேப்ரெக்கார்டரே இல்லை சார்''.



அதனால என்ன? வெஸ்டர்ன் மியூசிக்கை டெப்ரெக்கார்டர்ல மட்டும் தான் கேக்க முடியுமா? டிவிலேர்ந்து வந்த சவுண்டா இருக்கலாம்.

''அதுக்கும் சான்ஸ் இல்லை சார். இவங்க வீட்ல கேபிள் டிவி கனெக்ஷன் இல்லை. முதல் சேனல்ல அந்த நேரத்தில செய்திகள் சார். செகண்ட் சேனல்ல மெட்ரோ அவர்ல ராதாரவியோட ப்ரோக்ராம். இதில எங்கேயும் வெஸ்டர்ன் மியூசிக் இல்லை சார்''.

''இது என்ன, புதுசா ஒரு குழப்பத்தைக் கொண்டு வர்றிங்க? அந்த வீட்ல வி.சி.ஆரோ, வி.சி.பி. செட்டோ இருக்கிற மாதிரிதான் நினைக்கிறேன்.''

''இருக்கு சார். ஒருவேளை வி.சி.ஆர்.ல ஏதாச்சும் கேஸட் போட்டுப் பார்த்திருக்கலாம். வாங்க, அதை மட்டும் செக் பண்ணிடலாம். எனக்கு ஒரு உறுத்தல் நீங்கின மாதிரி இருக்கும்.''

இருவரும் ராஜியின் வீட்டுக்குள் வந்து, ஹாலில் ராஜி கிடக்கும் இடத்தின் அருகில் இருக்கும் டிவி ஸ்டாண்டுக்கு வந்தார்கள்.

டிவியின் மூடியை இரண்டு பக்கமும் ஸ்க்ரீன் போல தள்ளி, கீழே வி.சி.ஆர். மூடி திறந்து, கனெக்ஷன் கொடுத்து டிவி வி.சி.ஆர் இரண்டையும் போட்டு, ப்ளே பட்டன் போட்டார் சைமன்ராஜ்.

ஸ்கிரீனில் திருவிளையாடல் தருமி சீன் வந்தது.



''அரசே, இந்தப் பாடலை நானே... நானேதான் எழுதி எடுத்து வந்தேன். இல்லைனா மண்டபத்திலே வேற யாருமா எழுதிக் கொடுப்பாங்க?''

''என்ன மிஸ்டர் பரத், திருவிளையாடல்ல வெஸ்டர்ன் மியூசிக் வரும்?'' என்றார்.

''கர்நாடிக் மியூசிக்தான் வரும்.''

''போன்ல நீங்க வெஸ்டர்ன் மியூசிக்தான் கேட்டீங்களா?''

''என்ன சார் என்னையே சந்தேகப்படறீங்க? நான்தான் மறதியா சொன்னேன்னு வெச்சுக்கலாம். எதிர்வீட்டு டாக்டருமா மறதிக்காரரா இருப்பார்?''

என்று கேட்ட பரத் திடீரென்று டி.வி. ஸ்கிரீனில் உற்று நோக்கினான். அவன் கண்கள் கூர்மையானது.

படத்தை நிறுத்தினான். அருகில் சென்று பார்த்தான்.

இப்போது தெளிவாகத் தெரிந்தது. ஸ்கிரீனில் வலது புறம் ஒரு ஓர்த்தில் ஒரு சிகப்பு வட்டம்! இல்லை ரத்த வட்டம்! வட்டத்தின் கீழ்முனை கொஞ்சம் வழிந்திருந்தது.

பரத்திற்கு ஃப்ளாஸ் அடிக்க, உடனே கீழே கிடந்த ராஜியின் வலது கையினை கவனித்தான்.

வலது கை ஆட்காட்டி விரலில் ரத்தக்கறை இருந்தது.



''தட்ஸ் இட்''! என்ற பரத், ''இன்ஸ்பெக்டர்! இதோ பாருங்க - டி.வி ஸ்கிரீன்ல ரத்தத்துல வட்டம் போட்டிருக்கா ராஜி. அவ வலது கை ஆள்காட்டி விரலைப் பாருங்க, ரத்தக் கறை! சோபாகிட்ட குத்துப்பட்டு விழுந்தவ இந்த ஸ்டாண்ட் வரைக்கும் தேய்ச்சுக்கிட்டே வந்திருக்கா. நான் டெலிபோன் நோக்கி வந்து தொப்புன்னு விழுந்திருக்கலாம்னு நினைச்சேன்''.

சுசிலாவும் உள்ளே வந்துவிட்டாள்.

''யூ ஆர் ரைட் பரத். இந்த ரத்த வட்டத்துக்கு என்ன அர்த்தம்?''

''வெய்ட்! வெய்ட்!'' என்று தாடையைத் தடவிக் கொண்டு யோசித்த பரத், ''தன்னைக் கொலை செஞ்சவனை நமக்கு அடையாளம் காட்டியிருக்கா!''

''புரியலை''

''ஒரு கேஸட்டை வீடியோ டெக்குல போட்டு படம் பார்த்துக்கிட்டு இருக்கோம். ஒரு ஃபிரேமை அப்படியே ஃப்ரீஸ் பண்ணி நிறுத்த முடியுமா? முடியாதா?''

''முடியும்?''

''அந்த ஃப்ரீஸ் பண்ணின சீன்ல ஒரு நபரை மட்டும் ஸ்க்ரீன்ல வட்டம் போட்டுக் காமிச்சிருக்கா.''

''கன்ஃப்யூசிங்'' என்றார் சைமன்ராஜ். ''பரத், ஓக்கே, நீங்க சொல்ற மாதிரி வெச்சுக்கலாம். ஒரு வீடியோ கேஸட்ல கொலைகாரனோட முகம் இருக்கு. அவன் குத்திட்டுப் போனதும் நமக்கு அவனை அடையாளம் காட்டறதுக்காக அந்த கேஸட்ல அவன் இருக்கிற ஒரு ஃபிரேமை ஃப்ரீஸ் பண்ணி வெச்சிட்டு ரத்தத்தால வட்டம் போட்டிருக்கணும். அப்படித்தானே?''



''ஆமாம்''

''நீங்க வந்தப்ப டி.வி.ல அப்படி ஏதாச்சும் ஒரு சீன் ஃப்ரீஸ் ஆகி இருந்ததா?''

''இல்லை''

''மூடியிருந்ததை இப்ப நாமதானே திறந்தோம்?''

"யெஸ்!"

"இடிக்கலையா?"

"இல்லை. நான் தெளிவா இருக்கேன். இந்த டி.வி. ஸ்க்ரீன்ல ரத்த வட்டம் ராஜி கடைசி நிமிஷ முயற்சியா போட்டாங்கிறதை யாரும் மறக்க முடியாதில்லையா?"

"மறுக்கலை."

"அப்படிப் போட்டுட்டு அவளே எல்லாத்தையும் அணைச்சி, டி.வி. மூடியையும் மூடுவாளா?"

"மாட்டா."

"ஸோ, அதை செஞ்சது கொலைகாரன்! அவன்தான் எல்லாத்தையும் ஆஃப் பண்ணிட்டு டி.வி.யை மூடிட்டுப் போய்ட்டான்."



"மறுபடி கேள்வி இருக்கு."

"என்ன?"

"அவளைக் குத்தின அவன் ஸ்க்ரீன்ல இவ வட்டம் போடற வரைக்கும் பார்த்துட்டு உக்கார்ந்திருந்தானா?

"மறுபடி பதிலும் இருக்கு. கொலைகாரன் ராஜியை மூணு தடவை குத்தினான். கத்தியைத் தூக்கிப் போட்டான். அவ சரிஞ்சி விழுந்தா. அவ செத்துட்டதா நினைச்சி தன்னோட கைல உள்ள ரத்த கறையை கழுவ பாத்ரூம் போயிருக்கலாம். கழுவிட்டு புறப்படறப்ப ராஜி இந்த மாதிரி கடைசி விநாடில



வட்டம் போட்டு தன்னைக் காட்டிக் கொடுக்க ஏற்பாடு செஞ்சிருக்கறதைப் பார்த்துட்டு எல்லாத்தையும் அணைச்சான். அவன் இருக்கிற கேஸட்டை எஜக்ட் செஞ்சி வெளில எடுத்துகிட்டான். திருவிளையாடல் கேஸட்டைப் போட்டான். மூடினான். புறப்பட்டு போய்ட்டான்."

"அநத கேஸட்டையும் எடுத்துட்டுப் போய்ட்டான்னு சொல்றிங்களா?"

"அவன் புத்திசாலியாக இருந்தா அப்படித்தான் செய்வான். செய்திருக்கான். வெஸ்டர்ன் மியூசிக் வர்ற கேஸட் அது! எதுக்கும் பார்த்துடலாமே"



பரத் கீழே இருந்த டிராயரைத் திறந்து பார்த்தான்.

ஐந்து வீடியோ கேஸட்டுகள் இருந்தன.

மைக்கேல் மதன காமராஜன், மௌனராகம், பட்டணத்தில் பூதம், பவுனு பவுனுதான், அவர்கள்!

"எல்லாமே சினிமா கேஸட்ஸ்! வெஸ்டர்ன் மியூசிக் தொடர்பே இல்லை. நான் கேட்ட மியூசிக் பேர்கூட என்னால சொல்ல முடியும். வெய்ட். இப்ப சொல்றேன்" என்று யோசித்தான் பரத். "எஸ்! மைக்கேல் ஜாக்ஸன்தான் அது! அவரோட **'BAD'** கேஸட்ல வர்ற சாங்தான் நான் கேட்டேன். சந்தேகமே இல்லை" என்றான்.

''போச்சுடா! அந்த கேஸட்டையும் அவன் எடுத்துக்கிட்டுப் போய்ட்டான்னு சொல்றீங்க. மைக்கேல் ஜாக்சனோட கேஸட்ல அவன் எப்படி இருக்க முடியும்? இவனும் அந்த மியூசிக் ட்ரூப்ல இருக்கிறவன்னு சொல்லப் போறீங்களா பரத்?'' என்றார் சைமன்ராஜ்.

''இந்த ஒரு கேள்விக்கு மட்டும்தான் எனக்கு பதில் தெரியலை'' என்ற பரத் எழுந்து பக்கத்தில் இருந்த அறையின் அட்டாச்ட் பாத்ரூமிற்குள் சென்று வெள்ளை நிற வாஷ்பேசினில் கூர்ந்து பார்த்தான்.

''சார்! இங்கே வந்து பாருங்க. குரோமியம் பிளேட்டட் வில்லைக்கும் பீங்கானுக்கும் நடுவில் உள்ள ஜாய்ண்ட்ஸ் ரெட் ரெட்டா இருக்குப் பாருங்க. சோதிச்சுப் பாருங்க. நிச்சயமா அது பிளட்தான்''.

''கை கொடுங்க! உங்க யூகம் கரெக்கட்டா இருக்கு'' என்று கையைப் பற்றி குலுக்கினார் இன்ஸ்பெக்டர்.

''என்ன சார், கொலைகாரனையேப் பிடிச்சிட்ட மாதிரி இதுக்குப் போய் இவ்வளவு சந்தோஷப்படறீங்க? என் யூகம் கரெக்ட்னா அந்த கத்தியிலயும், திருவிளையாடல் வீடியோ கேஸட்லயும் ஒரு கை ரேகை கிடைக்கும்'' என்றார் பரத்.

''அதாவது அவன் கிளவுஸ் போடாம செயல்பட்டிருந்தா..'' என்றாள் சுசிலா.






மூன்லைட் டிடெக்டிவ் ஏஜன்சீஸ் அலுவலகத்தில் பரத் அந்த டைப்படித்த ரிப்போர்ட்டுகளை வரிவரியாய், பென்சில் முனையால் தொட்டுத் தொட்டுப் படித்துக் கொண்டிருந்தான்.

அவன் கையெழுத்து போட்டதும், பெற்றுச் செல்வதற்காக மேஜைக்கு எதிரில் மாதவி நின்றிருந்தாள். ரவி ஸ்டூல் மேல் ஏறி நின்று மூன்று சுவாமி படங்களுக்கும் வெள்ளிக்கிழமை என்பதால் பூச்சரம் மாட்டிக் கொண்டிருந்தான்.

கையெழுத்துப் போட்டு முடித்து வீட்டு நீட்டியபடி, ''மாதவி, என்ன இது நகம் எல்லாம் எலி கடிச்ச மாதிரி இருக்கு?'' என்றார் பரத்.

''ரொம்ப டென்ஷனாகறப்ப என்னால நகம் கடிக்காம இருக்க முடியலை சார்.''

''அப்படி என்ன டென்ஷன்?''

''என் வீட்டுக்காரர் முந்தி மாதிரி இல்லை சார்''

''இப்போ இன்னும் குண்டாயிட்டாரா?

சர்க்கஸ் சாப்பாடுன்னா அப்படித்தான். உன் டென்ஷன் நியாயம்தான். ஒரு தடவை அவரோட கை குலுக்கிட்டு ஒரு வாரம் அயோடெக்ஸ் தடவ வேண்டியதாப் போச்சு. கை குலுக்கினதுக்கே அந்த வலின்னா... யு ஆர் ரியலி பாவம்! ஏம்மா உனக்குப் போயும் போயி ஒரு சர்க்கஸ் பயில்வானை மாப்பிள்ளையா கட்டி வச்சாரே உங்கப்பா! அவரைச் சொல்லணும். பென்சிலையும், பீப்பாவையும் பக்கம் பக்கமா நிக்க வச்ச மாதிரிதான் ரிசப்ஷனிலேயே நின்னிங்க. உன்னோட டென்ஷனுக்கு நகம் என்ன, விரலையே கடிச்சுக்கலாம் நீ.''



''சார்! அவர் குண்டா இருக்கிறது எனக்குப் பிரச்னையே இல்ல.''

''பின்னே?''

''என்னை வேலைக்குப் போகாதேன்னு சொல்றார்''

''ஏன்?''

''என்னை சந்தேகப்படறார்.''

''உன்னை'' என்றான் நம்பாமல்.

''என் அழகு அவர் ஒருத்தருக்கு மட்டும்தானாம். டயலாக் அடிக்கிறார்.''

''என்ன மனுஷன்மா அவரு? இல்லாததுக்கெல்லாம் உரிமை கொண்டாட நினைக்கிறாரே. என் கையை குலுக்க மாட்டார்னு உத்தரவாதம் கொடுத்தா ஒரு நாள் வந்து விளக்கம் சொல்றேன்...நாட்ல ஆம்பளைங்களோட ரசனை இவ்வளவு தூரம் தரம் தாழ்ந்துடலைன்னு எடுத்துச் சொல்றேன்.''

மாதவி புரியாமல், ''சரி சார். ரொம்ப தேங்க்ஸ் ஸார். கண்டிப்பா வந்து பேசுங்க'' என்றாள்.

''பேசறேன். நீ நகம் போனதுக்காக கவலைப்படாதே. சரி செஞ்சுடலாம்.''

''எப்படி சார்?''

''கடைகள்ல செயற்கையா தயாரிச்சு விக்கிறாங்க. வாங்கி மாட்டிக்கிட்டாப் போதும். எடுப்பா இருக்கும்'' என்று நிமிர்ந்தபடி பரத் அறைக் கதவைத் தள்ளிப் பிடித்து இவர்களை முறைத்தபடி நின்ற சுசிலாவைப் பார்த்தான். பனியனின் 'UNIVERSITY OF MATRAS' என்று இருந்தது.



உள்ளே நுழைந்த சுசிலா, ''மாதவி, காலைல வந்ததும் என்ன அரட்டை? உன் சீட்டுக்குப் போ'' என்று அனுப்பிவிட்டு ஸ்டூலில் இருந்து இறங்கிய ரவியை, ''போய் காபி வாங்கிட்டு வா'' என்று அனுப்பிவிட்டு பரத் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்து, ''கொஞ்சம் கூட வெவஸ்தையே இல்லையா பரத் உங்களுக்கு?'' என்றாள்.

''விவஸ்தைகெட்டத்தனமா இப்ப என்ன நடந்து போச்சு, ஒரு பாஸ் தன் ஸ்டாஃப்கிட்ட பேசறதுகூட தப்பா?''

"ஒரு ரெண்டுங்கெட்டான் பையனை வேற நடுவுல வச்சிக்கிட்டு, என்னதான் பேசறதுன்னு ஒரு லிமிட் இல்லையா? அதிலயும் மாதவி கல்யாணமானவ."

"சும்மா காயாதே! என்ன தப்பா சொல்லிட்டேன்னு குதிக்கறே?"

"அவளுக்கு ஹேர் ஸ்டைல் நாகரீகமா இருக்கணும்னு சொல்லி அட்வைஸ் பண்ணிருக்கீங்க. பொறுத்துக்கிட்டேன். நாகரீகமான டிரெஸ் பண்ணிக்கணும்னு அட்வைஸ் பண்ணிருக்கிங்க. பொறுத்துக்கிட்டேன். ஆனா இன்னைக்கு நீங்க பண்ணின அட்வைஸ்.. டூ மச்!"

பரத்திற்கு புரியவில்லை. அப்படி என்ன சொல்லிட்டேன் என்று இன்றைக்கு இந்த குதி குதிக்கிறாள் இவள்?



கடைசியாக மாதவியிடம் சொன்னதை நினைத்துப் பார்த்தான்.

'கடைகள்ல செயற்கையா தயாரிச்சு விக்கிறாங்க. வாங்கி மாட்டிக்கிட்டாப் போச்சு. எடுப்பா இருக்கும்!'

உடனே பரத் வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தான்.

"சுசி. உனக்கு முன்கதை சுருக்கம் தெரியாது. கடைசியா நான் சொன்னதை மட்டும் கேட்டுட்டு நீ வேற அர்த்தம் செஞ்சுக்கிட்டு என்மேல கோபப்படறே. அவ டென்ஷன்ல கடிச்சி கடிச்சித் துப்பி தன்னோட விரல் நகத்தை எல்லாம் கோரமா வெச்சிருக்கா. அதுக்குதான் செயற்கையா நகம் கடையில கிடைக்குதுன்னு சொல்லிட்டிருந்தேன்."

"நிஜமா அதுதானா?"

"நீ மனசுல நினைச்சுக்கிட்டதும் அவளுக்கு பொருந்துங்கிறதால நீ அப்படி நினைச்சுட்டே. நிஜமா நான் நகம் பத்திதான் பேசினேன் சுசி."

"ஸாரி பரத், ஐ ம் ரியலி சாரி"

"புரிஞ்சுக்கோ, தப்பு என்கிட்டே இல்லை. உன் நினைப்புலதான் இருக்கு" என்று பரத் ஒலித்த டெலிபோனை எடுத்தான்.

"ஹலோ, நான் இன்ஸ்பெக்டர் சைமன்ராஜ் பேசறேன்."



"குட்மார்னிங் சார். நான் பரத். சொல்லுங்க."

"குற்றவாளி ரொம்ப கிளவர்.. கத்தியில கைரேகையே இல்லை. ஸோ.. கிளவுஸ் பயன்படுத்தியிருக்கணும். பாத்ரூம்ல இருந்த வாஷ்பேசின்ல ஒட்டியிருந்த சிகப்புத் துணுக்குகளைச் சுரண்டி லேபுக்கு அனுப்பிச்சிப் பார்த்ததிலே அது ராஜியோட ரத்தம்தான். போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்ல புதுசா தகவல் எதுவும் இல்லை. ராஜியோட ரூமை தலைகீழா புரட்டிப்பார்த்தாச்சு.. டைரி எழுதற பழக்கம் கிடையாது. வேறு எந்த க்ளூவும் இல்லை."

"ராஜியோட அண்ணன்கிட்டேர்ந்து தகவல் எதுவும் கிடைக்கலையா?"

"காலைல வந்தார். பதறிப் போய்ட்டார். எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ற மனநிலையில அவர் இல்லை. ஒரே தங்கச்சி. சின்ன வயசுலேர்ந்து இவர்தான் தூக்கி வளர்த்திருக்கார். சுவத்துல தலையை மோதிகிட்டு அழுது... எனக்கே கலங்கி போச்சு. போஸ்ட்மார்ட்டம் முடிஞ்சதும் பாடியை வாங்கி அவர்கிட்ட ஒப்படைச்சேன். கிரிமேஷன் முடிஞ்சது. இப்ப அவர் வீட்லேர்ந்துதான் பேசறேன். அவரை விசாரிச்சுட்டு இருக்கேன். இஃப் யு ஆர் இன்ட்ரெஸ்டட், வர்றீங்களா? நேத்து ரொம்ப இன்வால்வ்டா இருந்ததால சொல்லணும்னு தோணிச்சு."

"வர்றேன் சார். நானே உங்களுக்கு போன் செய்யணும்னு இருந்தேன். ஒரு புதிருக்கு விடை தெரிஞ்சிக்கிற சுவராஸ்யம் யாருக்கும் இருக்குமே. நான் வர்றேன்" என்று வைத்தான் பரத்.

"எங்கே... ராஜி வீட்டுக்கா?"

"ஆமாம்."

"கேஸ் இப்போ போலீஸ் கேஸாகி இன்ஸ்பெக்டர் சைமன்ராஜ் முழு வேகத்தில இறங்கிட்டாரே. நேத்து நமக்குப்பட்டதை சொல்லியாச்சு. வந்தாச்சு. இன்னும் எதுக்கு இந்தக் கேசை துரத்திக்கிட்டு?" என்றாள் சுசிலா.





"நாலு வார்த்தைதான் பேசினாலும், அந்தக் குரல் என்னால மறக்கவே முடியாது சுசி. என்னோட போன்ல பேசின ஒரு பொண்ணை நேரில் சந்திக்கப் போய் பிணமா சந்திக்கிறேன். கொடுமை! குற்றவாளி புத்திசாலிதனமா தன்னை அடையாளம் காட்டற கேஸட்டை எடுத்துட்டுப் போனது, எனக்கு விடப்பட்ட சவால் சுசி.

அந்த ரத்த வட்டம் ராஜி எனக்கு தகவல் சொல்றதுக்காகப் போட்டுக் காட்டினது. அவன் சாமர்த்தியமா தப்பிச்சிட்டது சரியா? உன்னை கூப்புடலை. நான் மட்டும் போறேன்."

"என்ன இவ்வளவு எமோஷனலாகிட்டிங்க? விட்டா ராஜியை எரிச்ச சுடுகாட்டுக்குப் போய் சாம்பல் மேல சபதம் செஞ்சி சத்தியம் பண்ணிடுவீங்க போலிருக்கு. வர்றேன். உங்களுக்கு நான் இல்லைன்னா கை ஒடிஞ்சா மாதிரி இருக்கும்" என்று புறப்பட்டாள் சுசிலா.

"நீ கூட இல்லைன்னா கை மட்டுமில்லை சுசி. எல்லாமே ஒடிஞ்சு மாதிரி இருக்கும். வா பைத பை போறது துக்கம் நடந்த வீடு."

"அதுக்கென்ன?"

"நீ முதல் பட்டனைப் போட்டுக்கறது நல்லது" என்றான் பரத்.

## 11



சுந்தர் வீட்டு வாசலில் பந்தல் போடப்பட்டிருந்தது. வாடகை நாற்காலிகளில் துக்கத்திற்கு வந்த உறவினர்கள் 'பார்' மூடப்பட்டது. நாஞ்சிலார் கவிதை, ஹர்ஷத் மேத்தாவின் ஒரு கோடி' என்று துக்கம் நீங்கலாக எல்லாம் நடுவில் வெற்றிலைப் பாக்கு தட்டு வைத்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வீட்டுக்குள் ஹால் சுத்தம் செய்யப்பட்டு ராஜியின் புகைப்படத்திற்கு பெரிய மாலை போடப்பட்டு, ஊதுபத்தி புகைந்து கொண்டிருந்தது.

மாடியில் இருந்த அறையில் பரத், சுசிலாவை வரவேற்று அவர்களை என்ஜினியர் சுந்தருக்கு அறிமுகம் செய்து வைத்தான் பாலாஜி.

இன்ஸ்பெக்டர் சைமன்ராஜ் புன்னகைத்தார்.

சுந்தர் முகம் வீங்கியிருந்தது. கண்கள் சிவந்திருந்தன.



"இவ்வளவு தூரம் சீரியஸா அந்த போன் காலை நான் நினைக்கலை சார். இல்லைன்னா ராஜியை தனியா விட்டுட்டு திருச்சி போயிருக்க மாட்டேன்"

"முதல் போன் கால் வந்தப்ப நீங்க இருந்தீங்களா?" என்றான் பரத்.

"இல்லை. நான் ஆபீஸ்லேர்ந்து வந்ததும் ராஜி சொன்னா."

"ஒரு தடவை சந்திச்சிருக்கிறதா அவன் சொல்லியிருக்கான்"

"ஆனா ராஜிக்கு குரலை வச்சி ஞாபகத்துக்குக் கொண்டு வர முடியலை."

"சரி, அடுத்து ரெண்டாவது தடவை அவன் போன் செஞ்சதும், இவங்க பார்க் போனதும், அதுக்கப்புறம் நடந்ததும் பாலாஜி விபரமா உங்ககிட்ட சொல்லியிருப்பார். நீங்க என்ன நினைக்கறீங்க?"

"அவனுக்கு மனநிலையில் கோளாறு இருக்கணும் சார். சாதாரண மனுஷன் இப்படி நடந்துக்குவானா? யாரும் யாரையும் விரும்பலாம். அவன் என் தங்கையை விரும்பியிருக்கான். ஆனா ராஜி பாலாஜியை நேசிக்கிறது தெரிஞ்சதும் ஒரு சாதாரண மனுஷன் மனசுக்குள்ளே சோகத்தை விழுங்கிக்குவான். இவனோ போன் செஞ்சி மிரட்டற மாதிரி பேசினான்."

"அவன் யாரா இருக்கலாம்னு உங்களால

ஏதாச்சும் யூகம் செய்ய முடியுதா? என்றாள் சுசிலா.

"முடியலை"

"இப்பத்தான் இதைப்பத்தி விபரம் சொல்லி இன்ஸ்பெக்டர் கேட்டார். எங்க வீட்ல எனக்கும் சரி, ராஜிக்கும் சரி அப்படி கேஸட் வாங்கிப் போட்டுப் பார்க்கற அளவுக்கு டேஸ்ட் இல்லை. வெஸ்டர்ன் மியூசிக் நான் ஐஸ்க்ரீம் கடைகள்லே போடறப்போ ரசிக்கறதோட சரி."

"சார், எதிர்த்த வீட்டு டாக்டர் கேட்டிருக்கார். நானும் போன்ல கேட்டேன். உங்க சிஸ்டர் ஒரு வீடியோ கேஸட் அந்த சமயம் பார்த்துகிட்டு இருந்திருக்கா. இதில மாற்றம் இல்லை. அது சினிமா இல்லை. மைக்கேல் ஜாக்ஸனோட 'பேட்' கேஸட்ல உள்ள பாட்டு."



"புரியலை சார். அந்த மாதிரி எந்த வீடியோ கேஸட்டும் எங்க வீட்ல இல்லை. ஒருவேளை ராஜி தன் ஃப்ரெண்ட்ஸ் யார்கிட்டேர்ந்தாவது அப்படி ஒரு கேஸட் எடுத்துட்டு வந்து பார்த்திருக்கலாம்."

"நீங்க எந்த வீடியோ லைப்ரரில மெம்பர்"?

"கேட்டுட்டேன் பரத், இதே தெருவில 'வீடியோ ட்ராக்ஸ்'னு பேராம். ஆனா கேஸட்ஸ் எடுத்து ரொம்ப நாளாச்சுன்னு சொன்னார். நான் அந்தக் கடையில போய் விசாரிச்சட்டும் வந்துட்டேன். ராஜியை



நல்லா தெரிஞ்சிருக்குது அங்கே. ஒரு மாசத்துக்கு முன்னாடி 'ஒரு தடவை வந்து கேஸட் எடுத்துட்டுப் போனதுதானாம்.. அதுக்கப்புறம் வரவே இல்லைன்னு சொல்றாங்க. அந்தக் கடையில மைக்கேல் ஜாக்ஸன் வீடியோ கேஸட்டே இல்லை" என்றார் இன்ஸ்பெக்டர் சைமன்ராஜ்.

"ராஜியோட நெருக்கமான ஃப்ரெண்ட்ஸ் யாரு?"

"அவளுக்கு ஃப்ரெண்ட்ஸ் கம்மிதான். கம்ப்யூட்டர் கிளாஸ்ல இவளோட படிக்கிற சிந்துஜா, பத்மினி ரெண்டு பேரும் அடிக்கடி போன் செய்வாங்க. வீட்டுக்கு வந்திருக்காங்க. இவளும் அவங்க வீட்டுக்குப் போயிருக்கா. அப்புறம் பக்கத்து வீட்ல பாமான்னு ஒரு பொண்ணு இருக்கு. அதோட நல்லாப் பேசும். பழகும்."



"விசாரிச்சுட்டிங்களா?" என்றான் பரத். சைமன்ராஜைப் பார்த்து.

"இன்னும் இல்லை. இப்பத்தான் சொல்றார்"

"இவர் சொல்ற சிந்துஜா, பத்மினியை பாலாஜிக்குத் தெரிஞ்சுக்கணுமே"

"நல்லா தெரியும் சார். வீடுகூட தெரியும்" என்றான் பாலாஜி.

"பாமாவை நாங்க பார்க்கறோம். நீங்க பாலாஜியை அழைச்சுகிட்டு அந்த ரெண்டு பேர் வீட்லயும் விசாரிச்சுட்டு

வந்துடறீங்களா சார்? தன் தோழிகள் யார்கிட்டயாவது சமீபத்தில நடந்த ஃபன்னி மேட்டர்ஸ் சொல்லியிருக்கலாம்'' என்றான் பரத்.

மேலும் சுந்தரிடம் விசாரித்துவிட்டு அவர்கள் எழுந்து கொண்டார்கள்.

பக்கத்து வீட்டில் கேட்டைத் தொட்டதும், நாய் குரைத்தது.

''ஜூலி! சும்மா இரு'' என்று வந்த அம்மாவிடம் விபரம் சொன்னதும், ''ஒண்ணும் செய்யாது, வாங்க. ராஜி விஷயம் கேள்விப்பட்டதிலேர்ந்து பாமா பிரமை பிடிச்சவ மாதிரி ஆய்ட்டா. ஒரே அழுகை. லேசா ஜுரம் கூட வந்துருச்சி. காப்ஸுல் சாப்டுட்டு, படுத்திருக்கா. உட்காருங்க. கூப்புடறேன்'' என்று சொல்லி உள்ளேச் சென்றார்.



உட்கார்ந்த பரத் சுசிலாவிடம், ''ஒரு சின்ன பந்தயம் வெச்சுக்கலாமா? என்றான்.

''என்ன?'' என்றாள்.

''பாமா பிளாக்பெல்ட்தான்னு நான் சொல்றேன்.''

''கராத்தே ஸ்டூடண்ட்டா அவ? யார் சொன்னா?''

''அந்த பிளாக்பெல்ட் இல்லை சுசி'' என்று மேற்கொண்டு விபரம் சொல்ல முற்படும் முன்பாக பாவாடை, தாவணியில் வெள்ளை, ஜாக்கெட்டும், பிளாக் பெல்டுமாய் தலை கலைந்த, முகம் கலைந்த பாமா வந்தாள்.

சுசிலா அறிமுகப்படுத்திக் கொண்டு விசாரிக்க வந்ததாகச் சொன்னாள்.

''எனக்குத் தெரிஞ்சதை சொல்றேன்'' என்றாள் பாமா.

''உங்க வீட்ல உங்களை உபசாரம் பண்ணனுமா? முதல்ல உட்காருங்க. இப்பவும் ஜுரம் இருக்கா?'' என்றான் பரத்.

''லேசா இருக்கு''

''ராஜி கொலை செய்யப்பட்டதோட பின்னணி தெரியுமா உங்களுக்கு?''

''எதிர்வீட்டு டாக்டர் சடகோபன் சொன்னாரு. யாரோ ஒருத்தன் போன் பண்ணி மிரட்டிப் பேசினானாம். லவ்வர் கூட பழகாதேன்னு சொன்னானாம்.''



''அதான், பாமா பாலாஜியை லவ் பண்ணினது.. ஸாரி.. ராஜி, பாலாஜியை லவ் பண்ணினது உங்களுக்குத் தெரியும்?''

''தெரியும். ராஜியே சொல்லியிருக்கா''

''கொலைகாரன் ஒரு தடவை ராஜியை சந்திச்சுப் பேசியிருக்கிறதா பேச்சுக்கு நடுவில சொல்லியிருக்கான். நடந்ததையும், அவனோட பேச்சுக்களையும் வெச்சி பார்க்கிறப்ப, நிச்சயமா அவன் நார்மல் மனநிலையை உள்ளவன் இல்லை. ராஜிகிட்ட சமீபத்தில் யாராச்சும் அப்நார்மலா நடந்துகிட்டது உண்டா? அப்படி ஏதாவது விசித்திரமான சம்பவம்

சொல்லியிருக்காளா?''

''விசித்திரமான சம்பவம்னா'' என்று நெற்றியில் லேசாக விக்ஸ் தடவுவது போல இரண்டு விரல்களால் தடவிக் கொண்டு யோசித்த பாமா, ''ஒரு தடவை இவ மொபட் ஓட்டிக்கிட்டு போனப்ப க்ரீன் சிக்னல் விழறதுக்கு முன்னாலேயே ரோட்டை கிராஸ் பண்ணினாளாம்.

''சரி''

''டிராஃபிக் கான்ஸ்டபிள் ஓரங்கட்டச் சொல்லிட்டு கிட்ட வந்து கேஸ் எழுதிக்க இருந்தாராம். இவ கெஞ்சினாளாம். அவர் பிடிவாதமா இருந்தாராம். 'அவசரமா போக வேண்டியிருந்தது சார்''னு சொன்னாளாம். ''அப்படி என்ன அவசரம்''?னாராம். 'என் லவ்வர் கடற்கரையில வெய்ட் பண்ணு வாரேன்னு வேகமாய் போய்ட்டேன்'னு இவ சொன்னதும் அவர் சிரிச்சுட்டாராம். 'நானும் ஒரு பொண்ணை லவ் பண்றேன். சரி. சரி. போம்மா. ஆல் தி பெஸ்ட்'னு வாழ்த்தி அனுப்பிச்சாராம்.''

சுசிலா பரத் முகம் பார்த்து சலிப்பு காட்டினாள். ஆனால் பரத் முகத்தில் உற்சாகம் குறையாமல், ''அப்புறம்? இதுமாதிரி வேற ஏதாவது...'' என்றாள்.

''வேற.. ம்! போன வாரம் அவங்கண்ணன் பர்த்டே கொண்டாடினார் சார். மொட்டை மாடியில் பந்தல் போட்டு தடபுடலான பார்ட்டி. என்ஜினியர் சாரோட



ஃப்ரெண்ட்ஸ் நிறைய பேர் வந்திருந்தாங்க. பார்ட்டிக்கு என்னையும் இன்வைட் பண்ணியிருந்தா ராஜி. பார்ட்டியில அவ வயலின் வாசிச்சா. பார்ட்டி முடிஞ்ச மறுநாள் 'ரொம்ப பிரமாதமா இருந்திச்சி''ன்னு நான் சொன்னேன். 'உங்க அண்ணனுக்கு எல்லாருமே ரொம்ப டீஸண்ட்டான ஃபிரண்ட்ஸ்'னு சொன்னேன். அப்ப அவ 'ஒரே ஒருத்தனைத் தவிர'ன்ன சொன்னா'

பரத் சுவாரசியமாகி ''அப்புறம்''என்றான்.

''பார்ட்டிக்கு வந்ததிலேர்ந்து திரும்ப போறது வரைக்கும் ஒருத்தர் மட்டும் ராஜியை வெச்ச கண் வாங்காம முறைச்சி பார்த்திக்கிட்டிருந்தானாம். அப்படியே மேல பாய்ஞ்சிடற மாதிரி ஒரு வெறிப் பார்வையாம். அது மட்டுமில்லாம பார்ட்டி முடிஞ்சி எல்லாரும் புறப்பட்டுப் போனப்ப சிலர், 'நீங்க நல்லா வயலின் வாசிச்சீங்க'ன்னு சொல்லிட்டு போனாங் களாம். ஆனா அந்தாளுகிட்ட வந்து 'யூ ஆர் வெரி ப்யூட்டிஃபுல்'னு சொன்னானாம். இவளுக்கு சங்கடமாய் போய்டுச்சாம். ஆத்திரத்தை அடக்கிக்கிட்டு 'தேங்க்யூ'ன்னு சொன்னாளாம். அப்புறம் அவன் இவளோட துப்பட்டால நீட்டிக்கிட்டிருந்த ஒரு நூலைப் பிடிச்சி இழுத்து எடுத்துக்கிட்டு 'உங்க ஞாபகார்த்தமா'ன்னு சொல்லி பாக்கெட்ல

போட்டுக்கிட்டுப் போயிட்டானாம்.

பரத் முகத்தில், மூளையில் என்று சகல பாகங்களிலும் பிரகாசமானான்.

''அவனைப் பத்தி அடையாளம் சொன்னாளா ராஜி?''

''இல்லை. நானும் கேட்டுக்கலை.''

''பார்ட்டி நடந்தப்ப ஒருத்தன் முறைக்கிறதைப் பத்தி எதுவும் சொல்லலையா?''

''இல்லை. மறுநாள் பேச்சு வந்தப்பதான் சொன்னா. நேத்தே சொல்லியிருந்தா அந்தாளை நாலு வார்த்தை கேட்டிருக்கலாமேன்னு நான் சொன்னேன். ஃபங்ஷன்ல உள்ள கலகலப்பு கெட்டுப் போயிடக் கூடாதுன்னு பேசாம இருந்துட்டதா சொன்னா.''

''பார்ட்டில வீடியோ கவரேஜ் எதுவும் செஞ்சாங்களா?''

''ஆமாம்''

''கை கொடுங்க பாமா. இல்லை. வேணாம். பரவால்லை சுசி. வா புதிர் விலகுது. இனிமே ராஜியோட அண்ணனைத்தான் விசாரிக்கணும்'' என்றான் பரத். ''ரொம்ப தேங்க்ஸ். நீங்க போய் படுத்துக்குங்க.''

மீண்டும் ராஜியின் வீட்டிற்கு வந்தார்கள்.






''என்ன சார் சொல்றீங்க நீங்க? என் பர்த்டே பார்ட்டில கலந்துகிட்ட என்னோட ஃபிரண்ட்ஸ்ல ஒருத்தன்தான் கொலைகாரனா?''

''அப்படி இருக்க சான்ஸ் இருக்கு. பார்ட்டியை வீடியோ கவரேஜ் செஞ்சிங்க இல்லே?''

''ஆமாம்.''

''நேத்து கொலை நடந்தப்ப அந்த வீடியோ கேஸட்டை ராஜி போட்டுப் பார்த்துக்கிட்டிருந்துக்கலாம். அப்ப கொலைகாரன் வந்து குத்தியிருக்கலாம். அவன் கை கழுவ பாத்ரூம் போன சமயம் ராஜி கேஸட்ல அவன் தெரியற இடத்தை ஃப்ரீஸ் பண்ணி ரத்த வட்டம் போட்டிருக்கலாம். அந்தப் பார்த்த அவன் கேஸட்டை எடுத்துட்டு, திருவிளையாடல் போட்டு வெச்சிட்டுப் போயிருக்கலாம். பொருந்துது இல்லே?'' என்றான் பரத்.

''இருங்க சார். திலக் வீடியோஸ்ல நான் கவரேஜ் பொறுப்பைக் கொடுத்திருந்தேன்.

நான் ஊருக்குப் புறப்பட்டு போன வரைக்கும் அவங்க பின்னணியை மியூசிக் சேர்த்து கொடுக்க டிலே ஆகுதுன்னு பதில்தான் சொல்லிட் டிருந்தாங்களே ஒழிய, கேஸட் வந்து சேரல்லையே..''

''பின்னணியில என்ன மியூசிக் போடச் சொல்லியிருந்தீங்க?''

''மைகாட்! வெஸ்டர்ன் மியூசிக் சேர்க்கச் சொல்லியிருந்தேன்.''

''தட்ஸ் இட்! அவங்களுக்கு போன் இருக்கா? விசாரிங்க. நேத்து கேஸட்டை அவங்க கொடுத்திருக்கலாம்.''

சுந்தர் போன் எடுத்துப் பேசினான்.

''ஹலோ, நன் என்ஜினியர் சுந்தர் பேசறேன். நம்ம வீட்ல பர்த்டே பார்ட்டியை கவர் பண்ணின வீடியோ கேஸட் என்னப்பா ஆச்சி?... அப்படியா?.. சரி... சரி.. சரி...'' என்று வைத்த சுந்தர், ''நீங்க சொன்னது சரிதான். நேத்து ராத்திரி எட்டு மணிக்கு அவங்க அந்த கேஸட்டை வீட்ல கொண்டாந்து கொடுத்தாங்களாம். ராஜிதான் வாங்கிக்கிட்டாளாம்.

''அப்போ நம்ம கற்பனை நூறு சதவிகிதம் நடந்திருக்கு'' என்றாள் சுசிலா.

''ஓக்கே. இப்ப உங்க ஒத்துழைப்பாலதான் அவனைப் பிடிக்க முடியும். அவனைப் பத்தி எந்தவிதமான அடையாளமும் நமக்குத் தெரியாது. கறுப்பா? சிகப்பா? தெரியாது. ஆனா



அன்னைக்கு பார்ட்டிக்கு வந்த உங்களோட ஃபிரண்ட்ஸ்ல ஒருத்தன் அவன். எத்தனை பேரை இன்வைட் பண்ணிங்க?''

''நூறு இன்விடேஷன்ல பிரிண்ட் செஞ்சேன். அஞ்சு இன்விடேஷன் மிச்சமிருக்கு சார்.''

''ரைட்டு, தொண்ணூத்தி அஞ்சி பேரை இன்வைட் பண்ணிங்க. எல்லாரும் வந்துட்டாங்களா?''

''ஏழெட்டு பேர் வரலை''

''முதல்ல நீங்க இன்வைட் செஞ்ச தொண்ணூத்தி அஞ்சி பேரோட லிஸ்ட்டும் எனக்கு வேணும்.''

''என்னோட அட்ரஸ் புக்குல பார்த்து யார் யாரை இன்வைட் பண்ணலாம்னு நினைச்சேனோ, அவங்க பேருக்கு பக்கத்துல ஸ்கெட்ச் பேனாவில டிக் பண்ணிட்டேன். ஆஃபீஸ்ல டைப்பிஸ்ட் டைப் பண்ணி கொடுத்தாங்க.''

''இருக்கட்டும். அந்த அட்ரஸ் புக் இங்கே வீட்ல இருக்கா? உங்க ஆபீஸ்ல இருக்கா?''

''இங்கேதான் இருக்கு''

''எடுங்க அதை.''

சுந்தர் எடுப்பதற்கு எழுந்து சென்றபோது சுசிலாவிடம், ''பாமா பிளாக்பெல்ட்டான்னு எப்படி கரெக்டா சொன்னேன்?'' என்றான் பரத்.

"இப்ப அதுதான் ரொம்ப முக்கியமா பரத்?"

"நடுநடுவில ரிலாக்ஸ் பண்ணிக்கலாம். தண்ணித் துறையில தாயைப் பார்த்தா வீட்ல பொண்ணைப் பார்க்க வேண்டிய தில்லைன்னு ஒரு பழமொழி சொல்லு வாங்க தெரியுமா? அந்த மாதிரி..."

"அந்த மாதிரி?"

"அம்மாவே பிளாக்பெல்ட்டுன்னா... பொண்ணு நிச்சயமா பிளாக் பெல்ட்தான்னு தீர்மானிச்சேன். பந்தயம் காட்டாமப் போய்ட்டியே...."

"எதுக்குப் பந்தயம்?" என்று அட்ரஸ் புக்குடன் வந்தான் சுந்தர்.



"சார், உங்க ஃபிரண்ட்ஸ்ல இதை யார் செஞ்சிருக்கலாம்னு உங்களால யூகம் பண்ண முடியலையா?"

"இல்லை சார். என்னோட ஃபிரெண்ட்ஸ் எல்லாருமே ரொம்ப டீஸண்ட்டானவங்க. பாதி பேர் என் கஸ்டமர்ஸ்."

"சரி. சுசீ, சார் சொல்லச் சொல்ல பேர்களை மட்டும் தனியா ஒரு பேப்பர்ல எழுதிக்கிட்டு வா"

சுசிலா பேப்பரும் பேனாவும் எடுத்துக் கொண்டு தயாரானாள். சுந்தர் அட்ரஸ் புக்கை அகர வரிசைப்படி புரட்டி, "அண்ணாமலை, ஆனந்த் அப்பாசாமி" என்று சொல்லத் துவங்க...

பரத் ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு சாய்ந்து அமர்ந்து கொண்டான். நிமிடங்கள் நகர்ந்தன.

"எல்லாம் சொல்லி முடிச்சுட்டேன்"

"எத்தனை பேர் வந்திருக்கு சுசி?"

"தொண்ணூத்தி அஞ்சு" என்றாள்.

"ரைட்டு, இதில பார்ட்டிக்கு வராதவங்க பேர்களை எல்லாம் அடிச்சுடுங்க. உங்களுக்குத்தான் தெரியும் - யார், யார் வரலைன்னு."

சுந்தர் லிஸ்ட்டை வாங்கிப் பார்த்து வராத எட்டு பேர்களின் பெயர்களை அடித்தான்.

"ரைட்டு, போன்ல அவன் ராஜிகிட்ட தன்னை கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி கெஞ்சியிருக்கான். அநேகமாக அவன் கல்யாணம் ஆகாதவனாத்தான் இருக்கணும். இப்ப, இந்த லிஸ்ட்ல கல்யாணம் ஆனவங்க பேரை எல்லாம் அடிச்சுடுங்க."



சுந்தர் அடிக்கத் துவங்கினான். நாற்பத்தி மூன்று பேருக்கு கல்யாணம் ஆகியிருந்தது.

"வெரிகுட். மொத்தம் தொண்ணூத்தி அஞ்சு பேர். இதில எட்டு பேர் வரலை. மீதி எண்பத்தி ஏழு பேர். இதில் நாற்பத்தி மூணு பேர் கல்யாணம் ஆனவங்க. மீதி நாப்பத்தி நாலு பேர். இந்த நாப்பத்தி நாலு பேர்ல ஒருத்தன்தான் கொலைகாரன்."

சுசிலா உற்சாகமாக கேட்டாள். ''இந்த நாப்பத்தி நாலு பேரோட கைரேகையையும் வாங்கி...''

இடைமறித்தான் பரத், ''பிரயோஜனமில்லை. கொலை ஆயுதத்திலே கைரேகை இல்லை சுசி. அவன் கிளவுஸ் உபயோகிச்சிருக்கான். அவனோட டெலிபோன் மிரட்டலை பதிவு செஞ்சிருந்தா, ஒவ்வொருத்தருக்கும் போன் செஞ்சி பேசி வாய்ஸ் ரெக்கார்டர்ல கொடுத்து கண்டுபிடிச்சிடலாம். அதுக்கும் சான்ஸ் இல்லை.''

''அப்போ வேற என்ன வழி?''

''இரு.. இந்த வட்டத்தை இன்னமும் கூட சுருக்க முடியும் சுசி. அவன் ராஜிகிட்ட என்ன சொன்னான்? 'பாலாஜி' கைகட்டி சம்பளம் வாங்கறவன்; நான் பல பேருக்கு சம்பளம் கொடுக்கறவன்'னு சொல்லியிருக்கான். ஸோ.. சுந்தர் சார், இப்போ இந்த நாப்பத்தி நாலு பேர்ல வேலைக்குப் போய் சம்பளம் வாங்குறவங்க பேரை எல்லாம் அடிச்சிடுங்க.''

சுந்தர் ஒவ்வொரு பெயராக பேனாவை நிறுத்தி யோசனை செய்து அடிக்கத் துவங்கினான்.

முப்பத்தி இரண்டு பேர்கள் அடிபட்டன.

''இப்போ மிச்சமிருக்கிறது பனிரெண்டே பேர், அவன் வேளைக்கு ஒரு கார்ல போகலாம்னு சொல்லியிருக்கான். இதில கார் இல்லாதவங்க பேர்களையும், ஒரே ஒரு கார் வெச்சிருக்கிறவங்க பேர்களையும் அடிச்சிடுங்க.''

எட்டு பெயர்கள் அடிக்கப்பட்டன.

கடைசியாக எஞ்சியிருந்த நான்கு பெயர்களையும் பார்த்தான்.

''திருமலை, ராகவேந்திரன், சுமன், பத்ரிநாத். இந்த ஒவ்வொருத்தரைப் பத்தியும் சொல்லுங்க.''

''திருமலை, கோரமண்டல் சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட், பரம்பரை பணக்காரங்க, அப்பா, தம்பின்னு கூட்டுக் குடும்பம், மூணு கார் இருக்கு. ரெண்டு மூணு வீடுகள் இருக்கு. பெஸண்ட் நகர்ல வீடு.''

''ரைட். அடுத்து...''

''ராகவேந்திரன். வேளச்சேரில ஆஃப்செட் பிரிண்டிங் பிரஸ் வெச்சிருக்கார். ரெண்டு மூணு பேர் பார்ட்னர்ஸ். எழுபது பேர் வேலை பார்க்கறாங்க. தெய்வ பக்தி உள்ளவர். இவரோட நான் வருஷா வருஷம் அய்யப்பன் கோவில் போய்ட்டு வருவேன்''

''அப்புறம்?''

''சுமன். ஷேர் மார்க்கெட்ல புரோக்கர். ஷேர் விவகாரங்கள்ல புலி. எந்த கம்பெனி பத்தி கேட்டாலும் கடகடன்னு தகவல் சொல்வார். ஆபீஸ் மாம்பலத்தில இருக்கு.

ஒரு கான்டெஸா, ஒரு மாருதி வெச்சிருக்கார்.''

''கடைசி ஆளு?''

''பத்ரிநாத், கிரானைட்ஸ், பிஸினெஸ், கிண்டில பெரிய யார்டு இருக்கு. போனா மலைச்சிப் போய்டுவோம். வகைவகையா கிரானைட்ஸ் கல்லுகளை அடுக்கி வெச்சிருப்பார். எக்ஸ்போர்ட் கூட பண்றார். இவரும், இவரோட அண்ணனும் சேர்ந்து பிஸினெஸ் பார்க்கறாங்க. கொஞ்சம் ரிசர்வ்ட் டைப், அதிகமாய் பேசமாட்டார்.''

''இப்போ நீங்க என்ன செய்றீங்க, நாலு பேருக்கும் வரிசையா போன் பண்றீங்க. பிஸினெஸ் விஷயமா உங்களைப் பார்க்கறதுக்கு என் ஃபிரெண்டு ஒருத்தரை அனுப்பி வைக்கிறேன்னு சொல்லுங்க. நாலு பேரையும் நாங்க சந்திக்கிறோம்.''

சுந்தர் ஒவ்வொருவராக போன் செய்து பேசினான்.

''பரத், இந்த நாலு பேர்ல ராகவேந்திரனை இப்பவே லிஸ்ட்லேர்ந்து அடிச்சுடலாம். அவர் சிங்கப்பூர் புறப்பட்டுப் போய் மூணு நாளாச்சாம். வர்றதுக்கு இன்னும் ஒரு வாரமாகும்.''

''நல்லதா போச்சு'' என்ற மற்ற மூன்று பேர்களின் விலாசங்களையும் எழுதிக் கொண்டு எழுந்து கொண்டார்கள்.






**கா**ரை செலுத்தினாள் சுசிலா.

அருகில் பரத் சிகரெட் புகையை ஜன்னல் பக்கம் ஊதினான்.

''முதல்ல பத்ரிநாத்தைப் பார்க்கறோமா?''

''ஆமாம், ஒரு சின்ன ஐடியா''.

''என்ன?''

''அவன் ராஜியோட நடவடிக்கைகளை கண்காணிச்சிருக்கான். அதனாலதான் ராஜி பாலாஜியை லவ் பண்றது அவனுக்குத் தெரிஞ்சது. அதே மாதிரி கொலைக்கப்புறம் போலீசோட நடவடிக்கைகளை தெரிஞ்சுக்கவும் அவன் ஏதாவது ஏற்பாடு செய்திருக்கலாம். அதனால இந்த கேஸ்ல நீயும், நானும் இன்வால்வ் ஆகியிருக்கோம்னுகூட அவனுக்கு தெரிஞ்சிருக்கலாம்.''

''அதனால நாம நேர்ல போக வேணாம். அதைவிட வேற ஒரு சிம்பிளான பிளான் சொல்றேன். வண்டியை நம்ம ஆபீசுக்கு விடு.''

மூன்லைட் டிடெக்டிவ் ஏஜென்சி அலுவலகத்திற்கு வந்தார்கள்.

டெலிபோனை எடுத்து அருகில் வைத்துக் கொண்டான்.

ரிசீவரை எடுத்தான். கர்சீப் போட்டுக் கொண்டு முதலில் பத்ரிநாத்துடன் பேசினான் பரத்! ''வணக்கம் சார், என் பேரு குமரன். நான் திலக் வீடியோஸ்ல வேலை பார்க்கறேன். நான் உங்களை சந்திச்சுப் பேசணும் சார்'' குரலை வெகுவாக மாற்றிக் கொண்டான்.

''என்ன விஷயம்?''

''நான் போலீஸ்கிட்ட போனா நீங்க ஜெயிலுக்குள்ளே போகணும் சார்.''

''வாட் நான்சென்ஸ்? என்ன உளர்றே?''



''சார்.. நேத்து என்ஜினியர் சுந்தர் சார் வீட்ல பர்த்டே பார்ட்டில எடுத்த வீடியோ கேஸட்டை நன் டெலிவரி கொடுத்தேன். அவர் சிஸ்டர் ராஜி வாங்கிகிட்டாங்க. நான் போய்ட்டேன். பாதி வழி போனதும் பில்லு கொடுக்கறதுக்காக மறுபடி திரும்பி வந்தப்போ பெல் அடிச்சா பதில் இல்லை. ஆனால் கேஸட்லேர்ந்து மியூசிக் மட்டும் கேட்டது. ஏன் திறக்கலைன்னு புரியலை. எதிர் சைடுல இருந்த பெட்டிக்கடையில சிகரெட் வங்கி பத்த வெச்சிக்கிட்ட யோசிச்சப்போ.. அந்த வீட்லேர்ந்து நீங்க வெளியேறிப் போனீங்க, உங்களை பார்ட்டில நான் பார்த்திருக்கேன். வீடியோ கவரேஜுக்கு ஹெல்ப்பரா நான் வந்திருந்தேன். மறுபடி நான் வீட்டுக்குள்ளே வந்து பார்த்தா ராஜி செத்துக் கிடந்தாங்க, நான் பயத்துல ஓடியேப் போய்ட்டேன். இப்போ போலீஸ்கிட்டே நான் உங்களைப் பார்த்ததை சொல்லட்டுமா?'' என்றான் பரத்.

''தம்பி, நீ ஏதேதோ சொல்றே. நான் பர்த்டே பார்ட்டிக்குத்தான் வந்திருந்தேன். அதுக்கப்புறம் என்ஜினியர் வீட்டுப் பக்கமாக் கூட போகலை.''

''அப்ப நான் உங்களைப் பார்த்ததை சொல்லட்டுமா? நான் என்ன நினைச்சேன்னா ஒரு பத்தர்யிரம், இருபதாயிரம் கிடைச்சா வாங்கிக்கிட்டு சைலண்ட்டா இருந்துடலாம்னு நினைச்சேன்.''



''எனக்கு இதில சம்பந்தமே இல்லைன்னு சொல்றேன். மிரட்டிப் பார்க்கறியா? நீ யார்க்கிட்ட வேணாலும் போய் சொல்லிக்கோ!''

பத்ரிநாத் எதிர்முனையில் படக்கென்று போனை வைத்தார்.

''இவர் இல்லை சுசி. பயங்கரமான ரோஷக்காரரா இருக்காரு'' என்ற பரத் அடுத்ததாக திருமலையை போனில் அழைத்து...

அதே கதை வசனம் பேசி முடித்து,

"என்ன சார். நான் போலீசுக்கு போகட்டுமா இல்லை உங்களை பார்க்க வரட்டுமா?" என்ற போது...

சில விநாடி மௌனங்களுக்குப் பின்...

"நீ என் வீட்டுக்கு வர வேணாம். நீ ஒரு இடம் சொல்லு. நான் வர்றேன் அங்கே. பேசலாம். அவசரப்பட்டு போலீஸ்கிட்ட போய்டாதே!"

"நான் மறுபடி போன் செய்றேன் சார்" என்று போனை வைத்த பரத், "பறவை மாட்டிடுச்சி சுசி! இப்ப அடுத்த போன் இன்ஸ்பெக்டருக்குதான்" என்றான்.

திருமலை அதிரடியாய் கைது செய்யப்பட்டான். அவன் வீட்டில் அந்த பார்ட்டி கேஸட் கிடைத்தது. எல்லாம் ஒப்புக் கொண்டான்.

"நினைத்ததை எல்லாம் பணத்தால சாதிச்சே பழக்கம். பார்ட்டில ராஜியை பார்த்ததும் ரொம்ப பிடிச்சிப் போச்சு. விசாரிச்சதில அவ லவ் பண்றது தெரிஞ்சது. மிரட்டினேன். பார்க்குக்கு அவ தனியா வராம பாலாஜியை கூட்டிட்டு வந்ததைப் பார்த்துட்டேன். கோபம் வந்திடுச்சி. கிடைக்க மாட்டான்னு நிச்சயமாய்டுச்சி. 'அண்ணன் ஊர்ல இல்லை. தனியாத்தான் இருக்கேன்'னு அவ போன்ல சொல்லியிருந்தா. கிளவுஸ் மாட்டிக்கிட்டு கத்தியோட போய் வாயைப் பொத்திட்டு குத்தினேன். சரிஞ்சு விழுந்தா.



நான் போனப்ப பார்ட்டில எடுத்த வீடியோ கேஸட் பார்த்துக்கிட்டு இருந்தா. அவளைத் தீர்த்துட்டு புறப்பட்ட சமயம் காலிங்பெல் அடிச்சது. அமைதியா இருந்தேன். பாத்ரூம்ல ரத்தக்கறையா இருந்த கிளவுஸை கழுவிட்டு வந்தேன். அவ டி.வி.கிட்டே கிடந்தா. ஸ்கிரின்ல பார்ட்டி, கேஸட்ல நான் இருக்கிற ஒரு ஃபிரேமை ஃப்ரிஸ் பண்ணி என் தலைக்கு ரத்தத்தில வட்டம் போட்டிருந்தா. நான் கேஸட்டை எடுத்து வேற மாத்திட்டு, டி.வி.யை மூடி வைச்சிட்டு அவசரமா புறப்பட்டு வந்துட்டேன்."

சைமன்ராஜ் சொன்ன நன்றிகளை வாங்கி பாக்கெட்டில் போட்டுக் கொண்டு திரும்பும் போது பரத் சொன்னான்:

"ஆனாலும் சுசி, கொஞ்சம் நேர்மையான கொலைகாரன்"

"எப்படி?"

"அவன் நினைச்சிருந்தா கற்பழிச்சிட்டு கொலை செஞ்சிருக்கலாம். அப்படி செய்யலை. ஏன்னு கேட்டேனே. எனக்கு அவளை கல்யாணம் பண்ணிக்கத்தான் ஆசைன்னு சொன்னான். நல்லவேளையா ராஜி செத்துப் போனா. ஒருவேளை உயிரோட இருந்து இவன் கட்டாய தாலி கட்டி பொண்டாட்டி மாதிரி ஆக்கியிருந்தான்னா அவஸ்தை! ஷோ கேஸ் பொம்மை மாதிரி ஒரு நடமாடும்

அழகு பொம்மையா அவளை வெச்சுக்கிறதுதான் அவன் நோக்கமாம்.''

''மனசுல எத்தனை விதமான விரிசல் இருக்கு பாருங்க பரத். நீங்ககூட ஒரு சைக்யாட்ரிஸ்கிட்ட போய்ட்டு வர்றது நல்லது''

''ஏன்? எதுக்கு?''

''சதா சர்வ நேரமும் அழுக்கா பேசறீங்களே..''

''சுசி, நீ சொல்லி ஏதாச்சும் ஒண்ணாவது நான் கேட்டதா இருக்கட்டும். நான் சைக்யாட்ரிஸ்ட் கிட்டே போறேன். ஒரே ஒரு கண்டிஷன்.''

''என்ன?''



''கல்யாணமாகாத சைக்யாட்ரிஸ்ட்டா இருக்கணும்''

''நோ பிராப்ளம்.''

''கண்டிஷன் ஒன்ல 'ஏ' பொம்பளை சைக்யாட்ரிஸ்ட்டா இருக்கணும்'' என்றான் பரத்.

''உங்களுக்கு வைத்தியமே இல்லை பரத்'' என்றாள் சுசிலா.

**(முற்றும்)**